OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (06 - 03 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 99

# பூநகரி பள்ளிக்குடாவில் புலிகள் அதிரடி!
# ஐந்துக்கும் அதிகமான படையினர் பலி!!

### கிழக்கு தளபதி நியமனம்

மட்டக்களப்பில் உள்ள இராணுவத்தினரின் மூன்றாவது பிரிவுத் தலைமையகத்தின் கொமாண்டராக மேஜர் ஜெனரல் டபிள்யு ஆர். விஜேரத்னா நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### ஹெலி நோட்டம்

அளவெட்டி, மார்ச் 6

ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்றுக் காலை 10 மணியளவிலும் நண்பகலிலும் வலி வடக்குப் பகுதிகளை பலதடவைகள் வட்டமிட்டு நோட்டம் பார்த்துச் சென்றது. (உ-13)

## கௌதாரிமுனையில் 8 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், மார்ச். 6

பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டத்தை அவதானிக்க விடுதலைப் புலிகள் சென்ற சமயம் அவர்களுக்கும் இராணுவத்தினருக்கு மிடையே எதிர்பாராத விதமாக இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் போராளிகள் எட்டுப் பேர் வீரச்சாவடைந்தனர்.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் விவரம்:-

★ கப்டன் அன்புச்செல்வன் அல்லது ரகு (நாகமுத்து ராஜ்குமார், — விக்கினேஸ்வரா வீதி, புத்தூர் கிழக்கு)

★ கப்டன் அழகநம்பி (செல்லையா சங்கரலிங்கம்— திருமலை)

★ கப்டன் கரிகாலன் (மரியதாஸ் அன்ரனி சசிக்குமார் — ஜெயந்திநகர், கிளிநொச்சி)

★ கப்டன் கர்ணையா (தியாகராசா ஞானவேல் — மயிலிட்டி)

★ லெப்டினன்ட் துரையப்பன் (பொன்னம்பலம் மோகன்— அடம்பன் புளியங்குளம்)

★ லெப்டினன்ட் வண்ணன் (சுந்தரம் நாவலதாஸன் —

(6-ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 6

பூநகரி — பள்ளிக்குடா பகுதியில் நேற்றுக் காலை 6.15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்துக்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர், ஆயுத தளபாடங்கள் பலவற்றை அங்கிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

பள்ளிக்குடா கடற்கரையில் அமைந்துள்ள முகாமில் இருந்து சுத்திகரிப்பு பணியில் ஈடுபட புறப்பட்டு வந்த இராணுவத்தினர் மீதே — இராணுவ முகாமிலிருந்து சுமார் 250 யார் தொலைவில் வைத்து — இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலின் போது அப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்குமிடையே ஐந்து நிமிட நேரம் சண்டை இடம்பெற்றது.

இத்தாக்குலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டது. (உ-5)

## புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

பூநகரி பள்ளிக்குடாவில் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ ரீ- 56 துப்பாக்கி | — | 02 |
| ★ அவற்றுக்கான மகஸீன்கள் | — | 06 |
| ★ ரீ 81 துப்பாக்கி | — | 02 |
| ★ அவற்றுக்குரிய மகஸீன்கள் | — | 06 |
| ★ கிளைமோர் | — | 01 |
| ★ வயர் றோல் | — | 01 |
| ★ வெடிக்க வைக்கும் கருவி | — | 01 |
| ★ தண்ணீர் கான் | — | 01 |
| ★ ஏ. கே. ஹோல்ஸர் | — | 04 |
| ★ உயர்வலு தொலைத் தொடர்பு கருவி | — | 01 |
| ★ அதற்குரிய மேலதிக மின்கலம் | — | 01 |
| ★ ஜே. ஆர். ரக கிரனேட் | — | 02 |
| ★ நடுத்தர ரவை | — | 360 |
| ★ மின் குல் விளக்கு | — | 01 |

# ஸ்ரீலங்கா விமானப்படை, கடற்படை மீது
# பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள்!

### வியாழனன்று 'றுகுணு' வருகிறது

யாழ்ப்பாணம், மார்ச். 6

யாழ் செயலக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருள்கள் மற்றும் பொருள்களுடன் 'றுகுணு' கப்பல் எதிர்வரும் வியாழனன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-5-9-171)

## அமெரிக்கா சுமத்துகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 6

கண்மூடித்தனமான முறையில் — அளவுக்கு அதிகமான படைபலத்தை பயன்படுத்தி — ஈழத் தமிழ் மக்களின் பல மரணங்களுக்கு ஸ்ரீலங்கா விமானப்படையும் கடற்படையும் காரணமாக இருந்துள்ளன.

— இவ்வாறு அமெரிக்கா குற்றம் சுமத்தியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்காவின் கடந்த ஆண்டு மனித உரிமை நிலை தொடர்பாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டிருக்கிற .

கடற்படை, மற்றும் விமானப்படையின் நடவடிக்கைகளால் சென்ற ஆண்டில் 250 க்கும் அதிகமான தமிழ் மக்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்துக்கு மேலும் 5,000 துருப்புகள்!
### செவ்வாய் முதல் சேர்ப்பு

கொழும்பு, மார்ச். 6

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு மேலும் ஐயாயிரம் துருப்புகளைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் 16 நிலையங்களில் நடைபெறவிருப்பதாகவும் —

8 ஆம் 9 ஆம் வகுப்பு சித்தியடைந்தவர்கள் இந்த நேர்முகப்பரீட்சைகளுக்கு தோற்றலாம் என்றும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன. (உ-3)

### அடுத்த துணைவேந்தர் பதவி
## மூவர் பெயரையும் பேரவை மீண்டும் உறுதி செய்தது

யாழ்ப்பாணம், மார்ச். 6

யாழ். பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு பல்கலைக்கழகப் பேரவையால் சிபார்சு செய்யப்பட்ட மூவரின் பெயரையும் பேரவை மீண்டும் நேற்றுக் கூடி உறுதி செய்தது. சிபாரிசு செய்யப்பட்ட மூவரின் தெரிவு தொடர்பான அறிக்கையை உறுதிப்படுத்துவதற்காக நேற்று முற்பகல் 11 மணிக்கு பேரவை கூடியது.

சென்ற கூட்ட அறிக்கை அங்கு வாசிக்கப்பட்டு பேரவை உறுப்பினர்களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

துணைவேந்தர் பதவிக்கான மூவரின் தெரிவையும் பேரவை ஒருமனதாக ஏற்றுக் கொண்டதை அடுத்து அந்த அறிக்கையை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

மேற்படி மூவரைத் தெரிவு செய்வது தொடர்பான வாக்களிப்பில் முறைகேடுகள் இடம்பெற்றதாகத் தெரிவித்து முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

## நோயாளர்கள் வந்த கப்பல் கடலில் வைத்து சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 6

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்பாட்டில் நோயாளிகள் மற்றும் பயணிகளுடன் நேற்றுக்காலை வந்த 'நரோமா' கப்பல் பருத்தித்துறை கடலில் வைத்து கடற்படையினரால் சோதனையிடப்பட்டது. பிரங்கிப் படகுகளில் வந்த கடற்படையினர் கப்பலில் ஏறி பயணிகளை சோதனையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருமலையில் இருந்து 38 பயணிகளுடன் வந்த அந்தக் கப்பல் பயணிகளை இறக்குவதற்காக பருத்தித்துறை துறைமுகம் வருவதற்கு முன்னர் கடலில் வைத்தே இச்சோதனை நடத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் சிகிச்சை பெற்று திரும்பி வருவோரும் மற்றும் பயணிகளும் இக்கப்பலில் பருத்தித்துறைக்கு வந்து கொண்டிருந்தனர்.

சோதனையின் பின் நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்த நரோமா கப்பல், இங்கிருந்து நோயாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் உட்பட 71 பேரை ஏற்றிக்கொண்டு நேற்றே திருமலைக்குத் திரும்பிச் சென்றது.

(உ-5-9-15-17-173)

### கலுவாஞ்சிக்குடியில்
## படையினரின் கள்ள வாக்கில் ஐ. தே. க. வெற்றியீட்டியதாம்

கொழும்பு, மார்ச் 6

கடந்த வாரம் கலுவாஞ்சிக்குடி பிரதேச சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலின் முடிவை ஆட்சேபித்து மனு ஒன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

'ரெலோ' அமைப்பு இத்தேர்தல் ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்யவிருப்பதாக அந்த அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்;

கலுவாஞ்சிக்குடிப் பிரதேச சபைக்கான தேர்தலில் ஐ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுரா பேசிய கூட்டத்தை குழப்பிய ஐவர் கைது!

தென் மாகாணத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்காவைப் பேச விடாது கூக்குரலிட்டுக் குழப்பியது என்ற முறைப்பாட்டின் பேரில் ஐந்து பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சுதந்திரக் கட்சியைக் கடுமையாக விமர்சித்து அனுரா பேசிக்கொண்டிருந்த போதே அவரது பேச்சுக் குழப்பப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## வல்வை மீனவரை நோக்கி கடற்படையினர் தாக்கு!

வல்வெட்டித்துறை, மார்ச். 6

நேற்றுக் காலை 7 மணியளவில் வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் வள்ளங்கள் மற்றும் இழுவைப் படகுகள் மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதனால் மீனவரின் பல படகுகள் சேதமுற்றன. இரு படகுகளில் பெரிய விசல்கள் ஏற்பட்டன. எனினும் அருகில் வந்த மற்றைய இழுவைப் படகுகளின் உதவியுடன், சேதமுற்ற படகுகள் கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

நேற்றுக் காலை நோயாளரை ஏற்றி வந்த 'நரோமா' கப்பலை கடலில் வைத்து சோதனையிட்ட கடற்படையினரே, அதன் பின்னர் மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீன்பிடிப்பதற்கான தடைச் சட்டம் கடந்த முதலாம் திகதியுடன் நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், நேற்றுக் காலை இத் தாக்குதல் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-5-155)

# ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு
# பாட முறைகளில் மாற்றம்
## இவ்வருடம் முதல் நடைமுறைக்கு!

யாழ்ப்பாணம், மார்ச் 6

இந்த வருடத்தில் இருந்து ஜி. சீ. ஈ உயர்தர வகுப்பிற்குரிய பாடங்கள் மாற்றி அமைக்கப்பட உள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் ஜி. சீ. ஈ உயர்தர வகுப்புகள் ஆரம்பமாகும் போது, புதிய பாடமுறையின் பிரகாரமே போதனை நடைபெறும் என்று கல்விப் பகுதியினர் ஒருவர் தெரிவித்தார்.

உத்தேச புதிய பாடமுறையின் பிரகாரம் மாணவர்கள் தனித்தனிப் பாடங்களாக மூன்றையும், கூட்டுப்பாடமாக ஒன்றையும் பயில நேரிடும்.

நான்காவது பாடம் தாய்மொழி, கலாசாரம், ஆங்கிலம் ஆகிய மூன்றும் அடங்கிய ஒரு கூட்டுப்பாடமாக அமையும்.

[illegible] (கூட்டுப் பாடத்தின் புள்ளிகள் பல்கலைக்கழக அனுமதிக்குக் கணக்கில் எடுக்கப்படமாட்டா.

எனினும் பிரஸ்தாப பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தி பெற்றால் மட்டுமே பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற முடியும்.

உத்தேச பாடமாற்றங்களின் படி —

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பயில்வோர், உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றுடன் நான்கா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தெற்கின் தேர்தலை ஒட்டி
## ஆளும் கட்சியின் குண்டர் குழுக்கள்!

கொழும்பு, மார்ச் 6

தென் மாகாணசபைத் தேர்தல் தினத்துக்கு முன்பதாக அங்கு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட ஐக்கிய தேசியக் கட்சியினர் குண்டர் குழுக்களை அனுப்பி வைத்துள்ளனர் என்று தென்பகுதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ராஜாங்க அமைச்சர் ஒருவர் ஆயுதந் தரித்த 43 பேர் அங்கம் வகிக்கும் குண்டர்குழு ஒன்றை தென்பகுதிக்குக் கூட்டிச் சென்றுள்ளார் என்றும்—

காலி மாவட்டத்தில் உள்ள இரு வீடுகளில் அக்குண்டர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின.

முன்னர் இராணுவத்தில் பணிபுரிந்தவரும் சம்பந்தப்பட்ட ராஜாங்க அமைச்சரின் முக்கிய சகா என்று கருதப்படுபவருமான 'லொக்கா' என்றழைக்கப்படும் ஒருவரே இக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



குற்றமும் சுமத்துவினம்... பிறகு மறைவிலை குண்டுகளும் கொடுப்பினம்......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் ஓய்வூதியம்: தொழிலாளரும் சேர முடியும்

வலிகாமம் மேற்கு, மார்ச் 6
விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சொந்தக்காணி இல்லாத விவசாய கூலித் தொழிலாளரும் சேர்ந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஓய்வூதியத்திட்டத்தில் 18 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட விவசாயிகளும், சொந்தக் காணி இல்லாமல் குத்தகைக்கு காணி செய்பவர்களும் விவசாயக்கூலி வேலை செய்பவர்களும் சேர்ந்து கொள்ளலாம் என தொல்புரம் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் திரு ஆர். இராஜேந்திரம் தெரிவித்துள்ளார். (ஒ-175)

## தென் மாகாண சபைத் தேர்தல்: சுயேச்சை கண்காணிப்பு குழு அவதானிப்பது சிறந்தது

### சு. க. பொதுச்செயலர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 6
எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவிருக்கும் தென் மாகாணசபைத் தேர்தலை சுயேச்சையான கண்காணிப்புக் குழு ஒன்று அவதானிப்பது வரவேற்கத்தக்கது.

சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களும் பாதுகாப்புக்கும் ஆயுதங்களும் வழங்கப்பட வேண்டும் என்றும்—

தென் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தேர்தலைக்கவனிக்க எனதனி அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும் சுதந்திரக்கட்சி பொலிஸ் மா அதிபருக்குத் திட்டவட்டமான கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சு-எ)

## அதிபர்களுக்கான கூட்டம்

கொழும்பு, மார்ச். 6
யாழ்ப்பாணம் கோட்டக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு கோட்டக் கல்விப் பணிமனையின் முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும்.

## யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப்பணி மாநாடு

20. புதுப்புனல் வாரத்தில் பங்கு மட்டத்தில் நடந்த செயல்பாடுகள் எவை?

யாழ். மறைமாவட்டம்
1. யாழ்ப்பாணம் 2. மானிப்பாய் 3. பருத்தித்துறை 4. கிளிநொச்சி என்று நான்கு மறை வட்டாரங்களாக அல்லது மறைக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு மறைக் கோட்டங்களின் எல்லாப் பங்குகளிலும் (1) வேதாகமம் (2) நற்செய்தி அறிவிப்பு கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல் (3) திருவழிபாடு (4) குருக்கள், குருமாணவர், துறவியர் (5) பங்குத் திருச்சபை (6) பொது நிலையினர், இளைஞர், குடும்பம் (7) சமூகத் தொடர்பு (8) நீதி, சமாதானம், மனித முன்னேற்றம் (9) கல்வி, மறைக்கல்வி (10) கலை, கலாசாரம் என்ற பத்துத் தலைப்புக்களில் உரைகள் நடத்தப்பட்டு, கலந்துரையாடல் வைத்து ஒவ்வொன்றிற்கும் ஒரு வினாக்கொத்து நிரப்பி எடுக்கப்பட்டது.

21. மொத்தம் எத்தனை பங்குகளில் இப்புதுப் புனல் வாரம் அனுசரிக்கப்பட்டது

நான்கு மறைக் கோட்டங்களிலும் உள்ள ஏறக்குறைய 32 பங்குகளில் இவ்வாரம் செயல்படுத்தப்பட்டது. குருக்கள், துறவிகள், கன்னியர், அருட்சகோதரர், பொது நிலையினர் எல்லோரையும் கொண்ட இப் பத்துக் குழுக்கள் இந்த 32 பங்குகளுக்கும் முறைப்படி போய் இப்புதுப்புனல் வாரத்தை அனுசரிக்க உதவினர்.

22 பங்கு மக்கள் நிறையப் பேர் உற்சாகத்தோடு பங்கு பற்றினார்களா?

நிச்சயமாக எதிர்பார்த்ததை விட விருப்போடும், மகிழ்ச்சியோடும் பங்குபற்றினார்கள். மதியம் 2-30 மணிக்கே இந்நிகழ்ச்சிகளை ஆரம்பித்த போதும் அந்த வாரம் முழுவதும் மனநிறைவோடு வந்து பங்கு பற்றினார்கள்.

23 வேறு என்ன செயல்பாடுகள் செய்யப்பட்டன?

10 வாரங்கள் பங்கின் பிரதிநிதிகளை அழைத்து யாழ். மறைக்கல்வி நிலையத்தில் ஒருநாள் கருத்தரங்குகள் வைக்கப்பட்டன. 10 தலைப்புக்களிலும் ஞாயிறு மறை உரைகளும், வழிபாடுகளும் நடத்தப்பட்டன. முதல் நடத்தப்பட்ட வினாக்கொத்து சேகரிப்பில் பங்கு பற்றாதவர்களுக்கென இரண்டாவது வினாக்கொத்தும் கொடுக்கப்பட்டது. எல்லாப் பங்குகளிலும் கொடி தினமும், ஞாயிறு காணிக்கையும் சேர்க்கப்பட்டது.

24. தமது எண்ணங்கள், சிந்தனைகளை வெளியிட இறை மக்களுக்கு சுதந்திரம் உண்டா?

இம்மாநாடு குருக்களுக்கு மட்டும் உரியதல்ல. யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபைக்குரியது. திருச்சபையின் அங்கத்தவர்கள் யாரும் தங்கள் ஆலோசனைகள், அபிப்பிராயங்களை பங்குத் தந்தையர் மூலமாகவோ நேரடியாகவோ அனுப்பலாம். நேரடியாக அனுப்ப விரும்புவோர் அருட்திரு ஜே. நீக்கிலஸ், டி. பி. சி. பொதுச் செயலர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

25. இம் மாநாட்டில் பங்கு பற்றுவோர் விவரம் தரமுடியுமா?

ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஒரு நிரந்தரப் பிரதிநிதி, 8 நாட் பிரதிநிதி என 9 பேர் பங்கு பற்றுவார்கள். 80க்கு மேற்பட்ட குருக்கள் பங்கு பற்றுவர். மாநாட்டு அங்குரார்ப்பண வைபவத்தில் சகல தரப்பு இறை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 151 பிரதிநிதிகளும், 14 சிறப்பு பிரதிநிதிகளும் விருந்தினரும் பங்குபற்றுவர். மாநாட்டில் 97 நாட் பிரதிநிதிகளுடன் மொத்தம் 262 பிரதி நிதிகள் பங்குபற்றுவர்.

அன்பளிப்பு:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் புனித பத்திரிசியார் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் ஆங்கில பாடசாலை, கன்னியர் மடம் மகா வித்தியாலயம், யா/புனித மரியாள் வித்தியாலயம் (O L R.)

பொது மக்கள் தொடர்புக் குழு,
மேய்ப்புப் பணி மாநாடு. [வி-7508]

## ஆலயங்களில்

தென் மட்டுவில் வேரம்பேணி அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் இலட்சார்ச்சனை விழா இன்று ஆரம்பமாகி 10 நாட்கள் நடைபெறும். (த)

## இன்று

புத்தூர்க்கி குளிரூட்டல் உற்பத்தியின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா இன்று ஞாயிறு காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தலைமை அலுவலகத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

சரசாலை இந்து மன்றமும் சரசாலை மகளிர் சங்கங்களும் இணைந்து நடத்தும் மகளிர் தினவிழா இன்று காலை 9 மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும் (த 117)

★ ★ ★

தென்மராட்சி, தீவக உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிறு முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

வலிகாமம் மேற்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

யாழ் றோட்டரக்ட் கழகம் ஏற்பாடு செய்துள்ள ஆங்கில-தமிழ் நாடகப் போட்டிகள் இன்று காலையும் மாலையும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். தமிழ் நாடகப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

சரசாலை இந்துமன்றமும், சரசாலை நித்திலா மகளிர் சங்கமும் கூட்டாக இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் இடம்பெறும்

பிரதம அதிதியாக பேராதனைப் பல்கலைக் கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. க. அருணாசலம் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்துவார். (உ-30)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம் கில்னர் ஒழுங்கையில் இயங்கும் புங்குடுதீவு மேற்கு அ. மி. வி, அ சபை பாடசாலையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பெற்றோர் கல்வியியலாளர்கள் சந்திப்பு இடம்பெறும். (த)

★ ★ ★

வல்வை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிறு மாலை 1 30 மணிக்கு தீருவில் மைதானத்தில் நடைபெறும். (த-155)

★ ★ ★

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 40 ஆவது ஆண்டு பூர்த்தியை ஒட்டி மாணவர்களுக்காக நடத்தப்படும் போட்டிகளின் வரிசையில் இன்று காலை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் கவிதைப் போட்டிகள் நடைபெறும். (த-89)

★ ★ ★

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கள் பிற்பகல் 1.30மணிக்கு அதிபர் திரு ஏ. வீ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (த 90-162)

★ ★ ★

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கள் பிற்பகல் 1 30 மணிக்கு கல்லூரி அதிபர் சீ. கேசவராஜன் தலைமையில் நடைபெறும். (த-90)

★ ★ ★

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றிலில் வித்தியாலய அதிபர் திருமதி எஸ். ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## நாளை

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் நாளை திங்கள் காலை 9.30 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

★ ★ ★

யாழ். இந்து மைதானச் சந்தியில் அமைந்துள்ள மெய்கண்ட தேவர் ஆதீனத்தில் நாளை திங்கள் காலை 9 மணி முதல் காரியம் [illegible] குருபூசை வழிபாடும், சிறப்பு பல நாடிகள் [illegible] பேருரையும் இடம் பெறும்.

# இந்தி திணிப்புக்கு எதிரான போராட்டம் தி.மு.கவின் சந்தர்ப்பவாத அரசியலே!

இந்திரா காங்கிரஸ்—தி மு க. கூட்டணி ஏற்பட இப்போது வாய்ப்புக் கிடையாது என்று சொல்லப்படுகிறது.

அ. தி. மு. க. — இந்திரா காங்கிரஸ் கூட்டணி மீண்டும் உருவாகும் வாய்ப்புகளே தற்போது அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது.



கருணாநிதி

இந்த நிலையில் காங்கிரஸை நம்பிப் பயனில்லை என்று கருதும் தி மு. க. இந்தித் திணிப்பு ஆயுதத்தைத் தற்போது காங்கிரஸுக்கு எதிராக பயன்படுத்த தீர்மானித்து களத்தில் இறங்கியுள்ளது.

இதன் ஒரு கட்டமாகவே தி. மு. க. கடந்த திங்கட்கிழமை இந்தித் திணிப்புக்கு எதிரான போராட்டத்தைத் தமிழகத்தில் வெற்றிகரமாக நடத்த முடிந்தது.

இந்திமொழி எதிர்ப்பு என்பதை ஓர் அரசியல் தந்திரமாக மாற்றும் விஷயத்தில் தி. மு. கவும், அ. தி. மு. கவும் ஈடுபட்டுள்ளன.

காங்கிரஸுடன் தி மு க கூட்டணி வைக்கும் போதெல்லாம் இந்தி எதிர்ப்பை தி மு க. அடக்கி வாசிப்பதும்—

> இந்தி திணிப்புக்கு எதிராக தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது நடத்திவரும் போராட்டம் குறித்து நேற்று வெரித்தாஸ் வானொலியில் ''உண்மையின் எண்ணங்கள்'' நிகழ்ச்சியில் இடம்பெற்ற விமர்சனத்தின் சுருக்கம் இது

காங்கிரஸுடன் கூட்டு இல்லை என்றதும் இந்தி எதிர்ப்பை அது தூக்கிப்பிடிப்பதும் சந்தர்ப்பவாத அரசியலாக மாறியுள்ளது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தி. மு. கவும் காங்கிரஸும் இணைந்து கூட்டணி அமைக்க ஒரு வாய்ப்பு அண்மையில் உருவானது என்பதும்—

அவ்வேளையில் சென்னை தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகளின் நேரம் குறைக்கப்பட்டு, இந்தி நேரம் கூட்டப்பட்டது என்பதும்—

ஆனால் அப்போது இந்த இந்தித்திணிப்பை தி மு.க ஒரு பிரச்சினையாகக் கருதாது மௌனஞ்சாதித்தது என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்நிலையில்—

காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க வேண்டிய தேவை அ தி மு கவுக்கு இப்போது தேவைப்படுவதால் இந்தி திணிப்புக்கு அ.தி மு க அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றும் அவதானிகள் தெரிவித்தனர்.

நாளைக்கே தி.மு க. காங்கிரஸ் உறவு ஏற்பட்டால் இந்திமொழி எதிர்ப்பு என்னும் துண்டை தோளில் இருந்து தி.மு.க. தூக்கி எறிந்து விடும்.

திராவிட நாடு கொள்கையை எப்படி மெதுவாகக் கைவிட்டு பதவி மோகத்தில் அண்ணாதுரை தி மு.காவை உருவாக்கினாரோ அதே போல—

அவர் வழி வந்த கருணாநிதியும், எம் ஜி ஆரும் இப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவும் கூட தங்களின் சுயநலப்போக்குக்காகவே திராவிடக்கொள்கைகளை அடகு வைத்தேவருகின்றனர்.

திராவிட அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின்—திராவிட மக்களின்—உரிமையைப் பெற்றுத் தரும் என்று யாராவது கனவு கண்டால்—நம்பினால்—அது நமது அறியாமை என்றுதான் கூறவேண்டும்.



ஜெயலலிதா

இந்தி எதிர்ப்பு என்பது தி.மு காவும் அ.தி.மு.காவும் தங்கள் சுயநலனுக்காக அணியும் ஒரு முகமூடியாகும். தேவை முடிந்ததும் முகமூடியைக் கழற்றி விடுவார்கள்.

## சிறந்த கலைஞர்ரை உருவாக்கும் பொறுப்பு முதுகலைஞருக்குண்டு

### இசைவிழாவில் கவிஞர் புதுவை இரத்தினதுரை

யாழ்ப்பாணம், மார்ச் 6
''கலைஞர்கள் காலத்தின் கண்ணாடி ஆவர். கலைஞர்கள் தமது மண்ணுக்கும் மக்களுக்கும் ஏற்படும் துயர் கண்டு கொதித்தெழுவார்கள். தலை சிறந்த கலைஞர்களை உருவாக்கும் பொறுப்பு முதுபெரும் கலைஞர்களுக்கு உண்டு.''

இளங்கலைஞர் மன்றம் அண்மையில் நடத்திய இசை விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

இந்த நிகழ்ச்சி கடந்த 26ஆம் திகதி கலை பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு சேரலாதன் தலைமையில் நடைபெற்றது

கவிஞர் புதுவை இரத்தினதுரை மேலும் கூறியதாவது:

''கலைஞர்கள் கலைகளை வெறும் சான்றிதழுக்கான படிப்பாகக் கொள்ளக் கூடாது. அவர்கள் மண்ணையும் மக்களையும் உருகச் செய்யும் படைப்புகளை உருவாக்க வேண்டும்''

யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி பேசும் போது கூறியதாவது:-

வெளிநாடுகளில் உள்ள நிதியுதவும் நிறுவனங்களிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக வருட ஆரம்பத்தில் சமாதானத் தூதுகளை அனுப்புவதும் பின்னர் யுத்தத்தின் மூலம் எமது மக்களை அழிக்க முயல்வதும் ஸ்ரீலங்கா அரசின் வாடிக்கையாகிவிட்டது. இப்பொழுது பாரிய படையெடுப்பை நடத்தி தமிழ் மக்களை அழிக்க முயல்வதன் மூலம் தன்னை ஒரு சிங்கள தேசிய வாதியாகக் காண்பித்து ஜனாதிபதி பதவியில் நீடிக்க விஜயதுங்கா தயாராகிறார். தமிழர் தேசியப் போராட்டம் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று என பெரும்பாலான சிங்களவர்கள் உணரும் இந்த வேளையில் ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கையைச் சிதறடிக்கும் வகையில் நாம் எழுச்சியுற வேண்டும். தமிழர் தேசத்தைச் சிதைக்கவே அரசு முயல்கிறது. ஆனால் சிங்கள அரசே இன்று ஈடாட்டம் கொள்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

மன்றத் தலைவர் திரு. பொன். சுந்தரலிங்கம், திரு. மு இராமலிங்கம், திரு. எஸ் சோமசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. அன்பரசன், செல்வி கலைமணி ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர். (ஒ-111)

## வடமராட்சி கம்பன் விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடமராட்சி கம்பன் கழகத்தினர் நடத்தும் கம்பன் விழா [illegible] இறுதி நாள் நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய முன்றிலில் ஆரம்பமாகி நடைபெறும்.

காலை 'ஐயம் தெளி அரங்கு' இடம்பெறும். இதில் த. சிவசங்கர், க. யோகநாதன், ஸ்ரீ. பிரசாந்தன், ச. பணிமாறன் ஆகியோரின் ஐயங்களை திரு. கே. கே. சோமசுந்தரம், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் தெளிவிப்பர்.

மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகளில் கவியரங்கம் வழக்காடு மன்றம் ஆகியவை இடம்பெறும். ''தசரதன் குற்றவாளியா?'' என்ற தலைப்பில் நடைபெறும் வழக்காடு மன்றத்தில் வழக்குத் தொடுநர்களாக திருவாளர்கள் கே.கே. சோமசுந்தரம், த. சிவகுமாரன் ஆகியோரும், எதிர்வழக்காடுவோர்களாக திருவாளர்கள் க சிவராமலிங்கம், இராசெல்வவடிவேல் ஆகியோரும் பங்கேற்பர். நீதிபதிகளாக இலக்கணவித்தகர் திரு இ. நமசிவாய தேசிகர் திரு இ. ஜெபராஜ், திரு.தி. திருநந்தகுமார் ஆகியோர் பணியாற்றுவர். (த-173)

## விளையாட்டு நிகழ்வுகள்

கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டியில் இன்று காலை 9 மணிக்கு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து பற்றிஷியன் அணி மோதும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் மற்றோர் ஆட்டத்தில் கொக்குவில் இந்து அணியை எதிர்த்து ஷப்றா வி.க. அணி மோதும்.

★ ★ ★

அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் வலிமேற்கு உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் அராலி சின்ன சுதா விளையாட்டரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி:- அராலி மாவத்தை வி.க.எதிர் திருமகள் வி. க.

★ பிற்பகல் 4.30 மணி:- கலைவாணி வி. க. எதிர் வட்டு. சிவன் வி.க.

## திருக்குறள் சிவபுராண போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6
காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை நடத்தும் திருக்குறள், சிவபுராணப் போட்டிகள் யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நடைபெறும்.

சிறுவர் தொடக்கம் ஆண்டு 5 வரையான மாணவர்களுக்கு அமரர் ச. சபாபதி ஞாபகார்த்த சிவபுராண மனனப் போட்டியும் ஆண்டு6 தொடக்கம் ஆண்டு 13 வரையான மாணவர்களுக்கு அமரர் [illegible] போட்டியும் நடைபெறும். (த)

## மாஹோ, ஹெந்தல திரும்புகின்றன

மாவை இறக்கிக் கொண்டிருக்கும் ஹெந்தல கப்பல் அனேகமாக இன்று கொழும்புக்குத் திரும்பிச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் பரல்கள் இறக்கி முடிக்கப்படுவதையடுத்து ''மாஹோ'' கப்பல் நாளை பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுச் செல்லும்.

## இறால் விலை வீழ்ச்சி

தென்மராட்சிப் பகுதியில் ஒரு கிலோ இறால் ரூபா இருபது வரை விற்கப்படுகிறது இதனால் மீனின் விலையும் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (க-117)

## ஆடு வளர்ப்பு பயிற்சி வகுப்பு

ஆடுவளர்ப்பு பண்ணையாளருக்கான பயிற்சி வகுப்புகள் நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை ஐந்து நாட்களுக்கு யாழ். அரசினர் கால்நடை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

ஜனசவிய திட்டத்தில் கீழ் உதவிபெறும் ஆடுவளர்ப்போருக்கு என இப்பயிற்சி வகுப்புகள் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கொட்டடி வண்ணார்பண்ணைப் பகுதிகளைச் சேர்ந்த ஆடுவளர்ப்போரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

## முதலாண்டு நினைவு

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 21 |  | 15 |
| — | | — |
| 3 | | 2 |
| — | | — |
| 61 | | 93 |

புகழ்பூத்த பொன்னாலையின் பொன்மனச் செம்மல்

**வயித்திலிங்கம் அமிர்தலிங்கம்**
(இந்திரன்)
திதி. 6-3-94

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

கிரகத்தில் சூரியனாய் ஒளியிலே மறைந்தாய்
சிலர்ந்தெழுந்த அலைநடுவே நிம்மதியாய் துயின்றாய்
அன்றலர்ந்த தாமரைபோல் அழகுமுகம் கொண்டாய்
அசையாத உன்புகழை அரிகரனே ஏற்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதர,
சகோதரிகள்
மைத்துனன்

பொன்னாலை,
சுழிபுரம். (29770)

# மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தத்தை மேலும் சிக்கலாக்கிய ஹெப்ரோன் படுகொலைகள்

வெளி உலகம்

இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட மேற்குக்கரையில் உள்ள ஹெப்ரோன் (Hebron) நகர பள்ளிவாசல் ஒன்றில் வைத்து 40க்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து சர்வதேச நாடுகளின் கவனம் தற்போது மீண்டும் மத்திய கிழக்கை நோக்கித் திரும்பி இருக்கிறது.

முஸ்லிம்களின் புனித றம்ழான் தினங்களில் — அதுவும் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜும்ஆத்தொழுகையின்போது இந்தப் படுகொலைகள் நடைபெற்றிருப்பது மேற்குக்கரையிலும் காஸாவிலும் மட்டும் அல்ல முழு அரபு நாடுகளிலும் பெரும் கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

உபவாசம் செய்து, பலஸ்தீனர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த சமயம், பள்ளிவாசலுக்குள் நுழைந்த இனவெறியரான யூத குடியேற்றவாசி ஒருவர் இந்தப் படுகொலைகளை நடத்தி உள்ளார்.

கடந்த 45 வருடகால மத்திய கிழக்கு வரலாற்றை நோக்கினால் இந்தப் படுகொலைகளை ஒரு பெரிய சம்பவம் என்று கூறமுடியாது.

கடந்த காலங்களில் பலஸ்தீனர்களும், யூதர்களும் எட்டிக்குப் போட்டியாக இது போன்ற எத்தனையோ படுகொலைகளைச் செய்திருக்கிறார்கள்.

இஸ்ரேல் படைகளின் லெபனான் ஆக்கிரமிப்பின்போது பலஸ்தீன அகதிமுகாம் ஒன்றுக்குள் நடத்தப்பட்ட படுகொலைகள் — மூனிச் ஒலிம்பிக் போட்டிகளுக்குப்போன இஸ்ரேல் விளையாட்டு வீரர்கள் பலஸ்தீனர்களால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் —

இப்படி எத்தனையோ படுகொலைகளால் மத்திய கிழக்கு வரலாறு கறை படிந்து போய்க் கிடக்கிறது.

ஆனால் ஒரு வாரத்துக்கு முன்னர் ஹெப்ரோன் பள்ளிவாசலில் இடம்பெற்ற படுகொலைகள், மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் இடம்பெற்றிருப்பதால் மேற்குக் கரையிலும், காஸாவிலும், மட்டும் அல்ல முழு அரபு நாடுகளிலும் பெரும் புயலைக் கிளப்பி உள்ளது.

இப்படுகொலைகள் நடந்து ஒருவாரம் பூர்த்தியான நேற்று முன்தினம் (வெள்ளி) எகிப்தின் தலைநகரான கைரோவில் பெரும் அளவில் இஸ்ரேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்

## ஜீவமரணப் போராட்டத்தில் அரபாத்

டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

1978 காம்ப்டேவிட் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையில் இருந்த பிணக்குகள் தீர்க்கப்பட்ட பின்னர் முதல் தடவையாக எகிப்தில் பெரும் அளவில் இஸ்ரேல் எதிர்ப்பு உணர்வலைகள் எழுந்துள்ளன.

ஏற்கனவே எகிப்திலே இஸ்லாமிய அடிப்படை மதவாதிகளின் எழுச்சியினால் பெரும் இக்கட்டான நிலையில் இருந்து வரும் பிரதமர் ஹொஸ்னி முபாரக்குக்கு தற்போது உருவாகிவரும் புதிய தலையிடி பெரிய சவால் ஆகும்.

மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தத்தைக் குழப்புவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருந்த ''ஹமாஸ்'' இயக்கம் போன்ற இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்கள் தற்போதைய நிலைமையை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முனைவதில் ஆச்சரியம் இல்லை.

பலஸ்தீன தீவிரவாத இயக்கங்களினால் உலகெங்கும் உள்ள அமெரிக்க — யூத நலன்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் சமீப காலங்களில் இல்லாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளன,

ஹெப்ரோன் பள்ளிவாசல் படுகொலைகளை நடத்திய யூத குடியேற்ற வாசி அமெரிக்காவில் இருந்தே மேற்குக் கரையில் குடியேற்றப்பட்டவர்.

இப்படுகொலைகளின் போது பள்ளிவாசலுக்குள் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டு பலஸ்தீனர்களினால் இவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

டாக்டரான இவரிடமிருந்து 'With Love of Israel' என்று எழுதப்பட்டு அதன் கீழே கையெழுத்துப் போடப்பட்டிருந்த குறிப்பு ஒன்று பின்னர் கைப்பற்றப்பட்டிருந்தது

*1993 செப்டம்பர் ஒப்பந்தம்*

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இஸ்ரேல் பிரதமர் ரபீனுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்துக்கும் இடையில் வாஷிங்டனில் வைத்து மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்குக் கரையிலும், காஸாவிலும் பலஸ்தீனர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.

இதன் முதல் கட்டமாக 1993 டிசம்பர் 13 ஆம் திகதியில் இருந்து — அதாவது ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் காஸாவிலும் மேற்குக் கரையில் இருந்தும் இஸ்ரேல் தனது படைகளை வாபஸ் வாங்கும் நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டும்

இந்த ஆண்டு (1994) ஏப்ரல் 13ஆம் திகதி படை வாபஸ் பூர்த்தியாக வேண்டும்.

ஆனால் ஒப்பந்தத்தின் பிரகாரம் 1993 டிசம்பர் 13 ஆம் திகதி படை வாபஸ் இஸ்ரேலினால் ஆரம்பிக்கப்படவில்லை.

★ பலஸ்தீனர்களின் சுயாட்சிக்கு உட்படுத்தப்பட உள்ள மேற்குக்கரை நகரான ஜெரிக்கோ நகரின் பரப்பளவு.

★ காஸாவிலும், ஜெரிக்கோவிலும் உள்ள யூத குடியிருப்புகளைப் பாதுகாக்க நிறுத்தப்பட உள்ள இஸ்ரேல் படைகளின் எண்ணிக்கை.

★ ஜோர்தானுக்கும் ஜெரிக்கோவுக்கும் இடையிலான எல்லைகளிலும் எகிப்துக்கும் காஸாவுக்கும் இடையிலான எல்லைகளிலும் அமைக்கப்படும் காவல் நிலையங்களை இஸ்ரேலர்களா அல்லது பலஸ்தீனர்களா கட்டுப்படுத்துவது.

இந்த மூன்று விடயங்கள் குறித்தும் இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் இணக்கம் ஒன்றுக்கு வரத் தவறிவிட்டன.

*தனித்து விடப்பட்ட அரபாத்*

சமாதான ஒப்பந்தத்துக்கு இணங்க பலஸ்தீன விடுதலை இயக்கம் இஸ்ரேலை அங்கீகரித்துள்ளது

ஆனால் எந்த ஒரு அரபு நாடும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் பின்பற்றி இஸ்ரேலை அங்கீகரிக்க இதுவரை துணியவில்லை.

சிரியா, ஈரான், ஈராக், சூடான் போன்ற நாடுகள் இன்னும் இஸ்ரேல் எதிர்ப்பு அணியிலேயே இருந்து வருகின்றன.

இந்த எதிர்ப்பு அணியில் இருந்து சிரியாவை உடைத்து எடுத்து விட்டால் எதிர்ப்பு அணி பலவீனம் அடைந்து விடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

இஸ்ரேலுக்கும், சிரியாவுக்கும் இடையிலான கோலன் குன்றுகள் பிரச்சினையை சமாதான அடிப்படையில் தீர்ப்பதற்கு கிளின்ரன் நிர்வாகம் முயற்சிப்பதற்கு இதுவே காரணம் என்று கூறப்படுகிறது.

*தீவிரவாதிகள் கை ஓங்குகிறது*

ஒப்பந்தத்தை அமுல் செய்வதில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும்இடையில் இருந்து வரும் சிக்கலைத் தீர்ப்பதற்கு கெய்ரோவிலும், நோர்வேயிலும், ஸ்பெயினிலும், சுவிஸிலும் மாறி மாறி நடந்த சந்திப்புகள் பலன் எதனையும் அளிக்கத் தவறிவிட்டன.

இதன் காரணமாக பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்துக்கு இயக்கத்துக்குள்ளும், பலஸ்தீனர் மத்தியிலும் எதிர்ப்பு உருவாகி வருகிறது. சமீபகாலங்களாக ஒப்பந்தத்துக்கு எதிரான பலஸ்தீன தீவிரவாத இயக்கங்களின் கை ஓங்கி வந்தது.

இப்படியான ஒரு நிலைமையிலேயே தற்போது ஹெப்ரோன் பள்ளிவாசல் படுகொலைகள் இடம் பெற்றுள்ளது இது துரதிர்ஷ்டமானதே.

*சமாதான பேச்சு முறிவு*

ஹெப்ரோன் பள்ளிவாசல் படுகொலைச் சம்பவம் அரபாத் - ரபீன் இருவருக்குமே பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகிறது.

ஹெப்ரோன் படுகொலைகளைக் காரணம் காட்டி இஸ்ரேலுடன் நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுக்களை அரபாத் முறித்துக் கொண்டு விட்டார்.

அரபாத்தை சமாதானப் படுத்தி, முறிந்துபோன பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இஸ்ரேல் பல சலுகைகளை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

★ ஹெப்ரோன் பள்ளிவாசல் படுகொலைகளின் பின்னர், சுமார் 900 பலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

★ யூத தீவிரவாத இயக்கங்களின் ஆயுதங்கள் களையப்பட்டுள்ளன.

★ யூத குடியேற்ற வாசிகளின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

*யூத குடியேற்றம்*

1967ஆம் ஆண்டு ஜோர்தானின் மேற்குப் பகுதியும், எகிப்தின் காஸாவும் இஸ்ரேல் படைகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கு

**- சஞ்சாரன் -**

திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்டவைதான் யூத குடியிருப்புகள் ஆகும்.

காஸாவில் 4ஆயிரம் யூதர்கள் இதுவரை குடியேற்றப்பட்டுள்ளனர். மேற்குக் கரையில் ஒரு லட்சம் யூதர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

வலதுசாரி லிக்குட் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே கைப்பற்றப்பட்ட இந்த இரு பகுதிகளிலும் யூத குடியேற்றங்கள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

மத்திய கிழக்கு சமாதான ஒப்பந்தம் எதற்கும் இடைஞ்சலாக இருக்கும் என்று தெரிந்தும், கைப்பற்றப்பட்ட பகுதிகளை எதிர்காலத்தில் இஸ்ரேலுடன் நிரந்தரமாக இணைக்கும் நோக்கத்துடன் வலதுசாரி லிக்குட்கட்சி யூதர்களை குடியேற்றி இருந்தது.

தற்போது சமாதான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ள போதிலும் அதனை அமுல் நடத்துவதில் அங்குலத்துக்கு அங்குலம் சிக்கல் ஏற்படுவதற்கு இந்த குடியேற்றங்களே காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

*மயிரிழையில் தொங்கும் பெரும்பான்மை*

இஸ்ரேல் பிரதமர் ரபீன் என்னதான் சலுகைகளைச் செய்தாலும் அவை காஸாவிலும் மேற்குக் கரையிலும் உள்ள பலஸ்தீனர்களைத் திருப்திப்படுத்துவதாக இல்லை.

அங்கு யூத எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இஸ்ரேல் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு அங்கு தினமும் ஒருவரோ அல்லது இருவரோ பலியாகிக்கொண்டு வருகின்றனர்.

முறைப்படி ஹெப்ரோன் படுகொலைகளின் பின்னர் ஹெப்ரோனில் உள்ள யூத குடியிருப்புகளை இஸ்ரேல் பிரதமர் அகற்றி இருக்க வேண்டும். யூதகுடியிருப்பாளர்களின் ஆயுதங்களைக் களைந்திருக்கவேண்டும்.

ஆனால் ரபீன் இவற்றுக்குத் தயங்குகிறார்

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் ஆளும் தொழிற்கட்சியின் கூட்டரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலம் மயிரிழையில் தொங்கிக் கொண்டிருப்பதே இதற்குக் காரணம்.

அதேசமயம் இப்படியான நிலைமை உருவாகி ரபீன் கவிழ்க்கப்படுவதையும் அரபாத்தோ அல்லது அமெரிக்காவோ விரும்புவதாகவும் தெரியவில்லை.

புதிய தேர்தல் ஒன்று நடைபெற்று அதில் வலதுசாரி லிகுட் கட்சி வெற்றி பெறுமானால் முழுச் சமாதானப் பேச்சுக்களுமே குழம்பி விடும் இது அமெரிக்காவுக்கும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் நன்கு தெரியும்.

அதனால்தான் ரபீனைச் சாடுவதை விட்டு மேற்குக் கரையிலும், காஸாவிலும் உள்ள பலஸ்தீனர்கள் தமது பாதுகாப்பில் நம்பிக்கை வைக்கும் முயற்சியில் அரபாத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

இங்குள்ள பலஸ்தீனர்களுக்கு சர்வதேச பாதுகாப்பு வழங்க வேண்டும் என்பதே அரபாத்தின் தற்போதைய கோரிக்கை.

இது தொடர்பாக அமெரிக்க அதிபர் கிளின்டனுடன் பேச்சுவார்த்தை நடத்த பலஸ்தீன விடுதலை இயக்கத் தூதுக்குழு ஒன்று நேற்று முன்தினம் வாஷிங்டன் சென்றுள்ளது.

அரபாத்தை பொறுத்தவரை ஒப்பந்தம் என்னும் பொறிக்குள் அவர் விழுந்து விட்டார்.

எப்பாடுபட்டாவது அதனை அமுல் செய்வதிலேயே அவரின் அரசியல் எதிர்காலம் தங்கி உள்ளது.

★

ஜீவகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதை ஜேர்மன் ஐக்கிய திருச்சபை எதிர்க்கும்

## ஜேர்மன் தேவாலயப் பிரதிநிதி திருமதி லீவர் எமா பேட்டி

*ஜேர்மன் "டோற்மன்ற்" தேவாலயப் பிரதிநிதி திருமதி லீவர் எமா கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் உதயனுக்கு அளித்த பிரத்தியேக பேட்டி இங்கு பிரசுரமாகிறது. பேட்டி கண்டவர்: குகன்*

கேள்வி: ஜேர்மனியில் தங்கி உள்ள இலங்கைத் தமிழர் நிலை எப்படி அமைந்துள்ளது?

பதில்: அங்கு தமிழர்கள் தொழில் வாய்ப்புப் பெற்று நிம்மதியாக வாழ்கின்றார்கள். ஜேர்மன்மொழி தெரிந்த தமிழர்கள் தொழில் வாய்ப்புப் பெறுவது இலகுவாக உள்ளது பலர் தங்களுக்குக் கிடைக்கும் சமூக நல உதவித் தொகை போதும் என்ற நிலையிலேயே வாழ்கின்றனர்.

கேள்வி: ஜேர்மன் மொழியைப் படிக்கும் வசதி அங்குள்ள தமிழர்களுக்குக் கிடைக்கின்றதா?

பதில்: ஜேர்மன் ஐக்கிய திருச்சபை தமிழர்களின் கல்விக்கு உதவி வருகிறது. ஜேர்மன் மொழியைப் போதிக்க விசேட வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கூடுதலாகத் தமிழ்ப் பெண்கள் தான் இவ்வகுப்பில் கலந்து கொள்கின்றனர். ஆண்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தாமல் இருப்பது எமக்குக் கவலையைத் தருகின்றது. ஆங்கில வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தமிழ்க் குழந்தைகள் தமிழ் மொழியில் கல்வி கற்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

*ஜேர்மனியில் தமிழர் கலை நிகழ்வுகள்*

கேள்வி: ஜேர்மனியில் தமிழர் நடத்தும் கலாசார நிகழ்வுகள் பற்றிக் கூறமுடியுமா?

பதில்: தமிழர்கள் தங்கள் கலாசார முறைப்படியே திருமண வைபவங்களையும் மரண நிகழ்ச்சிகளையும் நடத்துகின்றார்கள். தமிழர் திருமண வைபவங்கள் நடத்துவதற்கு எமது தேவாலய மண்டபங்களை வழங்குகின்றோம்.

இந்த மத திருமணவைபவங்களைப் பார்த்து எம் நாட்டவர்கள் மெய்சிலிர்க்கின்றனர். பரத நாட்டியம் மற்றும் நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளையும் தமிழர்கள் நடத்துகின்றனர். பரத நாட்டியம், ஜேர்மன் பெண்களையும் கவர்ந்து வருகின்றது. ஜேர்மனிப் பெண் ஒருவர் பரத நாட்டியம் பயின்று ஆடினார்.

*தமிழ் அகதிகள்*

கேள்வி: ஜேர்மனியில் தஞ்சம் அடைந்துள்ள தமிழர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் சாத்தியம் பற்றி கூறமுடியுமா?

பதில்: இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பப் போவதாக ஜேர்மன் அரசு காலக்கெடு விதிப்பதும் — அதனை எதிர்த்து எமது திருச்சபைகள் குரல் கொடுப்பதும் அழுத்தத்தைப் பிரயோகிப்பதும் —

அதனைத் தொடர்ந்து ஜேர்மன் அரசு தனது திட்டத்தைக் கைவிடுவதும் —

பின்னர் ஓராண்டு கழித்து மீண்டும் ஜேர்மன் அரசு இப்படி காலக்கெடு விதிப்பதும் நாம் எதிர்ப்பதும் கடந்த பல ஆண்டுகளாக நடந்து வரும் நிகழ்ச்சியாகும்.

எமது திருச்சபையைப் பொறுத்த வரையில் இலங்கைத் தமிழர் ஜேர்மன் அரசினால் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்றே நான் கருதுகின்றேன்.

இலங்கையில் இயல்பு நிலை ஏற்பட்ட பின்னர் தான் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து நாம் சிந்திக்க முடியும்.

கேள்வி: இலங்கையில் தமிழர் துன்புறுத்தப்படுவது தெரிந்தும் அவர்களைத் திருப்பி அனுப்ப ஜேர்மன் அரசு முயற்சிப்பது ஏன்?

பதில்: இரண்டு ஜேர்மனிகளும் ஐக்கியப்பட்ட பின்னர். மேற்கு ஜேர்மனியில் தங்கியுள்ள கிழக்கு ஜேர்மனியர்களுக்கு தொழில் வாய்ப்புக் கிடைப்பது கஷ்டமாக உள்ளது. அதனால் அவர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகின்றார்கள். அதனைச் சமாளிக்க ஜேர்மன் அரசு இலங்கைத் தமிழ் அகதிகளை மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள அனைத்து அகதிகளையும் வெளியேற்ற முயற்சிக்கிறது.

*அகதிகள் மீது தாக்குதல்கள்*

கேள்வி: வெளிநாட்டு அகதிகள் மீது ஜேர்மனிய இடதுசாரிகள் தாக்குதல்களை நடத்தி வருவதாகக் கூறப்படுவது பற்றி......

பதில்: வேலை வாய்ப்பு, கல்வி வசதிகள் மற்றும் வசதிகள் கிடைக்காதவர்கள் தான் இப்படியான வன்செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். துருக்கி நாட்டைச் சேர்ந்த அகதிகள் மீது தான் இவ்வாறான வன்செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கைத் தமிழ் அகதிகள் இவ்வன்செயல்களால் பாதிக்கப்பட்டனரா என்பது குறித்து எமக்குத் தகவல் கிடைக்கவில்லை.

கேள்வி: இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது என்பது குறித்து ஜேர்மன் அரசு முன்முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?

பதில்: ஜேர்மன் அரசு முன்முயற்சி ஏதும் எடுத்துள்ளதா என்பது பற்றி எனக்குத் தெரியாது எமது அமைப்பு ஜேர்மன் அரசுக்கு இது விஷயத்தில் அழுத்தம் கொடுத்து வருகின்றது

இலங்கையில் மீண்டும் இயல்பு நிலை ஏற்பட வேண்டும்; சமாதானம் நிலவவேண்டும் என்ற விருப்பத்தை அரசப் பிரதிநிதிகளுடன் பேசும் போது நாம் தெரிவிப்போம்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்துத் தகவல் கிடைத்ததும், ஜேர்மனியில் சகல திருச்சபைகளும் கூட்டாக அமைத்துள்ள ஐக்கிய திருச்சபை மூலம் அரசுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

*யாழ் விஜயத்தின் நோக்கம்*

கேள்வி: தங்களின் யாழ்ப்பாண விஜயத்தின் நோக்கம் பற்றிக் கூறமுடியுமா?

பதில்: இங்குள்ள எமது சகோதர அமைப்பான மெதடிஸ்த சபையின் செயற்பாடுகளைப் பார்வையிடுவதும் — தமிழர்களின் கஷ்டங்களை நேரில் அறிந்து கொள்வதும் — எனது விஜயத்தின் நோக்கமாகும்.

1989 இல் நான் யாழ். வந்தபோது இருந்த நிலைவரத்துக்கு எதிர்மாறான நிலைவரத்தை இன்று காணக் கூடியதாக இருக்கிறது இது எனக்கு வருத்தத்தைத் தருகின்றது.

ஒரு நாள் விமானக்குண்டு வீச்சிற்கு இலக்கான எனது அனுபவத்தை, இங்குள்ள மக்கள் எந்த நேரமும் அனுபவித்து வருகின்றனர். என்பதனை நேரிற் காணக் கூடியதாக இருந்தது.

இந்த துயர நிலையை தாயகம் திரும்பியதும் எமது அரசாங்கத்துக்கு [illegible]

# பரிசுத்தம், தூய்மை, கருணை மதங்களின் தனிச் சொத்தல்ல

சர்வ சமயப் பேரவையை உருவாக்க முயற்சி செய்தவர்களுக்கு இறைவன் துணை நின்று, அவர்களுடைய தன்னலமற்ற உழைப்புக்கு வெற்றி வாகை சூட்டியிருக்கிறார்.

இங்கு வந்திருந்த அறிஞர் பெருமக்கள் என்மீது ஒப்பற்ற அன்பு காட்டியதற்

*1893 செப்டெம்பர் 27 ஆம் திகதி சுவாமி விவேகானந்தர், சிக்காகோ சர்வ சமயப் பேரவையில் நிகழ்த்திய நிறைவு நாள் சொற்பொழிவில் இருந்து தொகுக்கப்பட்ட சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன*

காகவும், சமய சமரசத்தின் ஒவ்வொரு கருத்தையும் அவர்கள் பாராட்டியதற்காகவும் அவர்களுக்கு என் நன்றி.

ஏதாவது ஒரு மதத்தின் வெற்றியாலும், மற்ற மதங்களின் அழிவாலும் மதங்களுக்கிடையில் ஒருமைப்பாடு ஏற்படும் என்று இங்கிருக்கும் யாரேனும் நம்பினால் அவரைப் பார்த்து நான், ''சகோதரரே! உங்களுடைய நம்பிக்கை வீண்'' என்று சொல்வேன்.

கிறிஸ்தவர் இந்துவாகி விட வேண்டுமா? கடவுள் அதைத் தடுப்பாராக! இந்துவோ, பௌத்தரோ கிறிஸ்தவராக வேண்டுமா? கடவுள் அதைத் தடுப்பாராக!

விதை தரையில் ஊன்றப் பட்டு மண்ணும், காற்றும், நீரும் அதைச் சூழ அமைக்கப்படுகின்றன. விதை மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ ஆகிவிடுகிறதா? இல்லை அது செடியாகிறது. தனக்குரிய வளர்ச்சி விதிக்கு ஏற்ப அது வளர்கிறது. காற்றையும், மண்ணையும், நீரையும் தனதாக்கிக் கொண்டு தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக மாற்றி ஒரு செடியாக வளர்கிறது.

சமயத்தின் நிலையும் இதுவே. கிறிஸ்தவர் இந்துவாகவோ, பௌத்தராகவோ

சமயம்

மாற வேண்டியதில்லை. அல்லது இந்து, பௌத்தராகவோ, கிறிஸ்தவராகவோ மாற வேண்டியதில்லை.

ஆனால் ஒவ்வொருவரும் மற்றச் சமயங்களில் இருக்கும் நல்ல அம்சங்களைத் தமதாக்கிக் கொண்டு தம் தனித் தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு தம் வளர்ச்சி விதியின் படி வளர வேண்டும்.

இந்தச் சர்வசமயப் பேரவை உலகத்துக்கு எதையாவது எடுத்துக் காட்டியிருக்கிறது என்றால் அது இது தான்;

பரிசுத்தம், தூய்மை, கருணை ஆகியவை உலகின் எந்த ஒரு கோயிலின் தனிப்பட்ட சொத்து அல்ல என்றும், ஒவ்வொரு சமய முறையும் மிகவும் சிறந்த பண்புள்ள ஆண்களையும், பெண்களையும் தோற்றுவித்திருக்கிறது என்றும் நிரூபித்துள்ளது என்பதுதான்.

இந்த சாட்சியங்களுக்கு முன்பு, தம் சமயம் மட்டும் தான் தனித்து வாழும், மற்றச் சமயங்கள் அழிந்துவிடும் என்று யாராவது கனவு காண்பார்களேயானால் அவரைக் குறித்து நான் என் இதய ஆழத்திலிருந்து பச்சாதாபப் படுவதோடு, இனிமேல் ஒவ்வொரு சமயத்தின் கொடியிலும் ''உதவி செய்; சண்டை போடாதே, ஒன்றுபடுத்து, அழிக்காதே. சமரசமும், சாந்தமும் வேண்டும். வேறுபாடு வேண்டாம்'' என்று எழுதப்பட்டிருப்பதையும் அவருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

★

## மாணவருக்கு மூக்குக் கண்ணாடி

பார்வை குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்பட உள்ளது.

பாடசாலைகளில் கண் பார்வைகுறைவான மாணவர்கள் கண்வைத்திய நிபுணரால் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்பட்ட கண்பரிசோதனை அறிக்கை, கண்ணாடி தேவைப்படும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் ஆகியவற்றை கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள், சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் காலை 8—11வரை சுத்தம் செய்து பெற்றுக்கொள்ள லாம். நல்லூர் வீடியோ, சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [29640]

நல்ல நிலையில் உள்ள பியானோ விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. கமலநாதன், இல. 16/12, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (29750)

புதிய Hoover Floor Polisher-Model No F. 2008 Double Brush - 60w France Make; Hard Grinder China; 24 அங்குல Pipe Wrench China தொடர்பு: தம்பி ஐயா அன்கோ, மின்சார உபகரண விற்பனையாளர், இலங்கை வங்கி அருகில், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (29738)

தூய வெள்ளைநிற யப்பானிஸ் ஸ்பீற்ஸ் ஒன்பது மாதங்கள் நிரம்பிய பொமனேரியன் சோடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. விநாயகலிங்கம், செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு. (29757)

நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் கிரைண்டிங் மில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை. (29765)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் பாடசாலைக்குக் கிட்ட 4 பரப்புக் காணி தனிக்கிணறு, குடியில்லாத வளவில் பனை, தென்னை உ. டு. கிழமை நாட்களில் பி. ப. 2—4 வரை தொடர்பு கொள்ளலாம். க. காசிப்பிள்ளை, அரச உத்தரவு பெற்ற நில அளவையாளர், சென்ற் ஆன்ஸ் ஒழுங்கை, மானிப்பாய். [7108]

### கோழிக்குஞ்சு விற்பனை

Christombu Golden Comet சிவப்பு ஒரு கிழமை பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (29736)

ஹைலைன் பிறவுண் (Hy-Line Brown) பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (29753)

### பஞ்சாங்கக் கையேடு

சுபநேர, சுபகரும, நாள் கோள், நற்பலன்கள் ஜனவரி 94 முதல் டிசம்பர் வரை வீரகேசரிவார ஜோதிட ஆய்வாளர் எஸ். தெய்வநாயகம் B. A. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை. (சி-7297)

### தேவை

மிருதங்கம் திருத்தவும், செய்யவும் பழக விரும்பும் வாலிபர்கள் தேவை. சம்பளம் வழங்கப்படும். கோ விஜயகுமார் 192/1, நாவலர் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (29719)

### காணவில்லை

குட்டி ஈனும் பருவத்திலுள்ள இரண்டு ஆடுகளை 24-2-94 முதல் காணவில்லை. ஒன்று நவிக்கறுப்பு நிறத்துடன் வயிற்றில் வெள்ளையும் மற்றது வெள்ளை நிறத்துடன் தலையில் கறுப்பும் உள்ளவை. இவை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து திருமதி குமாரசாமி, இல. 270 (132), கோயில் வீதி, நல்லூர் விலாசத்திற்கு தெரிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். (29763)

### கோழிக் கூடுகள்

புதிய இரட்டைத்தட்டுகள் கொண்ட கோழிக்கூடுகள் விற்பனைக்குண்டு இல. 14/1 பிளைச்சஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. (மகளிர் கல்லூரிக்கு சமீபமாக) (29722)

### வீடியோ பிரதிகள்

எமது நிறுவனத்தில் காலை 8—12 வரையும், மாலை 3 – 6 வரையும் வீடியோ பிரதிகள் பெற்றுக்கொள்ளலாம். புதுப் படங்களும் உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், [29642]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவசாயம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (29745)

### றோணியோ பிரதி

வினாத்தாள்கள், கட்டுரைகள், புத்தகங்கள் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. 100 பிரதிகள் இரண்டு பக்கத்திற்கும் 30/- மட்டுமே அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மாணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-7433)

தென்மராட்சியில்...

**பிறிலியன் கல்வி நிலயம்**

சங்கத்தானை, சாவகச்சேரி

1994 பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான O/L பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பம்!

ஞாயிறு காலை 9-00மணி வழமையான ஆசிரியர் குழுவினால் (7110)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 24 — 09 — 1923

இறப்பு: 21 — 01 — 1994

**முத்துத்தம்பி பேராயிரவர்**

(முன்னாள் அதிபர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி)

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

பிரிவால் துயருறும்;

அமரர் சுவாமிநாதன குடும்பத்தினர்,

மு அருணாசலம் குடும்பத்தினர்,

மு. இராமநாதன் குடும்பத்தினர்,

திருமதி பூமாலக்சுமி குடும்பத்தினர்.

சுதுமலை வடக்கு. (7113)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டப்படிப்பு கல்வியாண்டு 1993/94

## பொதுச்சேவை அலுவலர்க்கான அனுமதி

மேற்படி பட்டப் படிப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து என்னால் 1994 ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். இது 04 ஆண்டுக்காலக் கற்கை நெறியாகும்.

அனுமதிக்கான நிபந்தனைகள்

1 வயது

விண்ணப்பதாரி 1994 - 04 - 22 ஆம் திகதியன்று 45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

2 கல்வித் - தகைமைகள்

அ. க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் கீழ்க் குறிப்பிட்ட பாடங்களில் ஒரே முறையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

தாவரவியல்
விலங்கியல்
இரசாயனவியல்
பௌதிகவியல்
விவசாயம்

அல்லது

பல்கலைக்கழக பீடச் சபையினாலும் மூதவையினாலும் அங்கீகரிக்கப்படத்தக்க பிற கல்வித் தகைமைகள்

ஆ. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு வருடத்திற்குக் குறையாத விவசாய டிப்ளோமா நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3 அனுபவம்

டிப்ளோமாப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த பின்னர் விவசாயத்துறையில் 5 வருட அனுபவத்துடன் குறைந்தது நடுத்தர தொழில்நுட்ப தரத்தையும் அடைந்திருத்தல் வேண்டும்.

அனுமதி, எழுத்துப் பரீட்சை மூலமும், வாய்மொழிப் பரீட்சை மூலமும் வழங்கப்படும் 1994 மே மாதம் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக பரீட்சைக்கிளை சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்தும், உதவிப்பதிவாளர்/ விவசாயபீடம், கிளிநொச்சி அவர்களிடமிருந்தும் பெறப்படும் மேலதிக விபரங்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களில் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்துதல் வேண்டும். தபால் மூலமாக விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற்கட்டளையை சுயவிலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட 23x10 c m. அளவிலான கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

— பதிவாளர்.

(சி-7503)

யாழ் றோட்டறக்ட் கழகம்

நடத்தும்

பாடசாலை ரீதியிலான ஆங்கில, தமிழ்

## நாடகப் போட்டிகள்

காலம்: இன்று 06 — 03 — 1994 காலை 9-00 மணி

இடம்: யாழ் இந்துக் கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- செயலாளர்.

விளம்பர அன்பளிப்பு:

**பூபாலசிங்கம் புத்தகசாலை.**

யாழ்ப்பாணம், (29764)

## மற்றுமோர் அண்ணா தயாரிப்பு: திடீர் தோசை மா

250 கிராம் கொண்ட மாப் பைக்கட்டிலிருந்து 14 தோசை சுடமுடியும். 250 கிராம் மாவை எடுத்து அளவான தண்ணீர், உப்பு சேர்த்து உடனடியாகவே தோசை சுடலாம். விரும்பினால் நேரம் கழித்தும் சுடலாம்.

கிடைக்குமிடம்:

**அண்ணா கோப்பிக் கடை**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, இணுவில் (சி-7430)

## 7ஆம் ஆண்டு அழியா நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 30 — 12 — 1963

அரனின் திருவடியில்: 22 — 02 — 1987

செல்வன்

**கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்**

(வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவன்)

திதி: 06 — 03 — 1994

எங்கள் அன்புச் செல்வமே!

ஆண்டுகள் உதிர்கின்றன
அமைதிதான் துளிர்க்கவில்லை
நினைவுத் திரைகளில் தினம் நின்று ஆடுகின்றீர்
உங்கள் மறைவாலே இதயம் கனக்கிறது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்!

கிருஷ்ணபிள்ளை இந்திராணி குடும்பத்தினர்.

23, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [29748]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறந்த திகதி: 05 — 10 — 1984

இறந்த திகதி: 06 — 03 — 1992

**சந்திரகுமார் கபில்ராஜ் (கபி)**

(யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, 3ஆம் ஆண்டு மாணவன்)

ஈராண்டு சென்றதடா இனியவனே கபிலா!
ஈன்றவர்கள் படும் துயரம் பார்க்காயோ மகனே!
பால்முகமும் மாறவில்லை பாலகனே ஏதுசெய்வோம்
பாரினிலே நாமினிமேல் உனையெங்கு காண்போம்
மகேஸ்வரி தன்னில் மகிழ்வுடன் கற்றாய்
மனதினில் என்றும் நீங்கா திருப்பாய்
இறையவன் விதியால் இந்நிலம் விடுத்தாய்
இப்புவி தனிலே உனையாம் மறவோம்.

- குடும்பத்தினர்.

(29762)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பாக்கியம் கதிரிப்பிள்ளை**

தோற்றம்: 03 — 12 — 1930

மறைவு: 15 — 02 — 1993

திதி: 06 — 03 — 1964

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய், எங்கள் குடும்ப ஒளி விளக்காய் எம்மைப் பண்போடும் பாசத்தோடும் வாழ வைத்த அன்புத் தெய்வமே! ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு தான் பிறந்த மண்ணிலே மீளாத்துயில் கொண்டு ஓராண்டு மறைந்தாலும் பாச நினைவு எங்கள் நெஞ்சங்களில் என்றும் நீங்காது. தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்புக் கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவகுரு வீதி,
ஏழாலை மேற்கு, ஏழாலை. (7025)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி — 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| அமரர் | செல்வன் |
| --- | --- |
| **கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை** | **தாமோதரம்பிள்ளை நந்தகுமார்** |
| (இளைப்பாறிய ஆசிரியர்) | (யாழ். சென்ஜோன்ஸ் பழைய மாணவரும் மொறட்டுவ பல்கலைக் கழக மாணவரும்) |
| அன்னையின் மடியில்: 24 — 09 — 1918 | அன்னையின் மடியில்: 01 — 04 — 1960 |
| ஆண்டவன் அடியில்: 27 — 02 — 1992 | ஆண்டவன் அடியில்: 28 — 04 — 1986 |
| திதி: 06-03-1994 | திதி: 29-04-1994 |

அன்புத்தெய்வங்காள்! ஆண்டுகள் பலசென்றாலும் தங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சத்தை விட்டு நீங்குமோ! நீங்காது.

அன்பு மகனே! அருமைத் தலைவரே! என்றும் தங்கள் நினைவால் வாடுகிறேன். இரவில் வருவீர் கண் விழித்தால் ஓடி மறைவீர்.

நந்தனே! இது உங்கள் திருவிளையாட்டா? நானறியேன்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனிடம் வேண்டுகிறோம்.

உங்கள் நினைவால் ஏங்கும்:

| | |
| --- | --- |
| அன்பு மனைவி, | அன்பு அம்மா, |
| மகள், | ஆசை அக்கா, |
| மருமகன், | அத்தான், |
| பேரப்பிள்ளைகள், | மருமக்கள், |
| சகோதரி, | உற்றார், உறவினர், |
| உற்றார், உறவினர், | நண்பர்கள். |
| நண்பர்கள். | |

அண்டி வீதி,
மடத்தடி,
கொடிகாமம். [29709]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கம்பனை மீட்டுவோம்

"கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்ப்போம்".
"கம்பனுக்குத் தொண்டு கடவுளுக்குச் சேவை."
"எங்குமுள தென் தமிழ் இயம்பி இசை கொள்வோம்"
"அன்னவர்க்கே சரண் நாங்களே"
—இவை ஈழத்தில் இருந்து இயங்கும் பல்வேறு கம்பன் கழகங்களில் ஒரு சிலவற்றின் மகுடவாக்குகள்.

கம்பன் தந்த காப்பியத்தைப் பரப்புவதன் மூலம் கன்னித் தமிழ் வளர்க்கும் பணியையும் கடவுள் சேவையையும் தம் தொண்டு எனக் கொண்டு இயங்குபவர்கள் கம்பன் கழகத்தினர். அவர்கள் உழைப்பின் மற்றுமோர் மலராக வடமராட்சிக் கம்பன் விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உலக மகா காப்பியங்களுள் தலைசிறந்து விளங்குவது கம்ப நாடானுடைய இராம காதை. உலக இலக்கிய அளவிலே தமிழுக்கு உன்னத இடத்தை — உயர்வை — பெற்றுத் தந்த மகா காப்பியம் அது.

தமிழறிஞர்களுக்கு இலக்கியமாகவும், சான்றோர்க்கு அறநூலாகவும், அடியவர்களுக்கு ஆன்மீக நூலாகவும், மாணவர்களுக்கு கல்வி நூலாகவும், பாமரர்களுக்கு வாழ்வியல் நூலாகவும், போராளிகளுக்கு உணர்வு நூலாகவும், அது போற்றப்படுவது வியப்பன்று.

தமிழ் மொழியின் வளத்தை — சிறப்பை — உயர்வை — பறைசாற்றி நிற்பதோடு தமிழர்களின் பண்பாட்டை — நாகரிகத்தை — பழமையான வாழ்க்கை முறையை — பெருமையை — வெளிப்படுத்தி நிற்பது கம்பராமாயணம்.

வால்மீகி வட மொழியிலே தந்த காவியத்தை அதன் சுவை குன்றாது, பொருள் மாறுபடாது தமிழில் தந்த அதே சமயம் — தமிழர்களுக்காக — தமிழரின் வாழ்க்கை முறையை எட்டியதாக — அந்தக் காப்பியத்தைப் படைத்துத் தந்தவன் கம்பன்.

இத்தனை பெரிய காப்பியத்தை, பல்லாயிரம் பாடல்கள் கொண்ட ஒரு காதையை முன்னுக்குப் பின் முரண்படாத வகையில் காப்பியத்திலே வந்து போகும் அதிக எண்ணிக்கையான பாத்திரங்களின் குணப்போக்குகளைக் குழப்பாமல், இலக்கியச் சுவை ததும்ப வாழ்வியல் கருத்துக்கள் கொப்பளிக்க படைப்பது என்பது சாதாரண மனித சக்திக்கும் வாழ்க்கைக்கும் அப்பாற்பட்டது என்பதே உண்மை. இந்த வகையில் அசாதாரண படைப்பாளியாக கம்பன் மிளிர்கின்றான்.

தமிழின் இனிமையும் எளிமையும் கவிதை நயமும் சந்த இசையும், இலக்கிய அறமும் சிறக்க கம்பன் இராமாயணத்தைப் படைத்திருக்கின்றான்.

இலக்கியத் திறனாய்வாளர்கள் பெருங்காப்பியங்கள் உலகில் தோன்றுவதற்குரிய காலகட்டத்தைக் குறிப்பிடும் போது, இரண்டு நிலைகளிலே அவை உருப்பெறக் கூடும் என்கின்றனர்.

ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் எழுச்சி அல்லது அந்த சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி — இவை தான் அந்த இரண்டு நிலைகளுமாகும். அதற்கேற்றபடி உலக இலக்கியங்களின் உதாரணங்களை அவர்கள் காட்டுகிறார்கள்.

கம்பராமாயணம் எழுந்த காலம் ஒன்பதாம் நூற்றாண்டு பல்லவர் அரசு வீழ்ச்சி அடைந்து சோழ சாம்ராஜ்யம் — புலிக்கொடியின் ஆட்சி — தலைதூக்கத் தொடங்கிய காலம் அது.

சோழ சாம்ராஜ்யத்தின் எழுச்சியில் கம்பரும், அதன் வீழ்ச்சியில் சேக்கிழாரும் இரண்டு பெரும் காப்பியங்களை ஆக்கித் தந்தனர்.

மீண்டும் தமிழர்களின் மற்றொரு ராஜ்யத்துக்கு — புலிக்கொடியின் ஆட்சிக்கு — கால்கோள் இடும் காலப்பகுதியில் நாம் நிற்கிறோம்.

கம்ப காவியத்தை மீட்டுவதால் தமிழர் வளத்துக்கும், வாழ்வுக்கும் உகந்ததான ஒரு ராஜ்யத்தை நிர்மாணிக்கலாம்.

# ஜனநாயகத்தைப் பரிகாசம் செய்த கிழக்குத் தேர்தல்; அரசு வைத்த பொறிக்குள் வாக்காளர் சிக்கினர்

கிழக்கு மாகாணத்தில் விஜேதுங்கா அரசாங்கம் தேர்தலை நடத்தி முடித்து விட்டது. "என்ன பாடுபட்டும், என்ன ஆனாலும் அங்கு தேர்தலை நடத்தியே தீருவேன்" என்ற ஜனாதிபதியின் சபதம் நிறைவேறி விட்டது.

தேர்தல் குளறுபடிகள், தில்லுமுல்லுகள், மோசடிகள், பயமுறுத்தல்கள் என்பன இடம்பெற்ற போதிலும் அரசும் ஆயுதப் படையினரும் கிழக்கில் தேர்தலை "நடத்திக் காட்டி விட்டார்கள்."! அந்த வகையில் அரசாங்கத்துக்கு ஒரு வெற்றி தான். பிரேமதாசா செய்ய முடியாததை விஜேதுங்கா சாதித்து விட்டார்!

1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மட்டக்களப்பில் ஜனாதிபதி நடமாடும் செயலகம் நடத்தப்பட்டது. அங்கு ஒரு தேர்தலை வைக்க முடியுமா என்பதற்கான ஒரு கடும் சோதனையாகவே அது அமைந்தது எனலாம்.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி அங்கு "ஜனநாயகத்தை" நிலைநாட்ட வேண்டும் என்று மங்கள முனசிங்கா தெரிவுக்குழு 1992 இறுதிப் பகுதியிலேயே "சாடைமாடை"யாக பேசத் தொடங்கி விட்டது. அதனை மனதிற்கொண்டே பிரேமதாசா கிழக்கு மக்களின் இதயங்களை வெல்லும் அணுகு முறையின் ஆரம்பப் புள்ளியாக நடமாடும் செயலகத்தை கிழக்கு நகரங்களுக்கு நகர்த்தினார்.

ஒளிக்கதிர் — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

முதலில் அம்பாறையிலும் பின்னர் மட்டக்களப்பிலும் நடத்தினார். எனினும் தேர்தல் ஒன்றை உடனடியாக நடத்தக் கூடிய அரசியல் — பாதுகாப்பு சீதோஷ்ணம் அங்கு இல்லை என்பதனை உணர்ந்த அவர் கிழக்கில் அப்போது உடனடியாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முனையவில்லை. தேர்தலை நடத்தக்கூடிய விதத்தில் தாம் கிழக்கைத் "துப்புரவு" செய்து விட்டதாக இராணுவ உயர் அதிகாரிகள் புளுகித் தாழிதம் செய்த போதும் பிரேமதாசா எடுபடவில்லை.

ஆயினும், சிங்கள-பௌத்த தேசியவாதம், பேரினவாதம் என்ற வட்டத்தின் அப்பழுக்கில்லாத பெருந்தலைவனாகக் காட்டிக் கொள்வது என்ற கொள்கையை வரித்துக் கொண்ட விஜேதுங்கா, அந்தளவுக்குப் பொறுத்துக் கொள்ளத் தயாராக இல்லை.

### ஆசையின் அரசியல் வடிவம்

மீண்டும் தாமே ஜனாதிபதியாக வரவேண்டும் என்ற ஆசை வந்ததும் அவரது அரசியற் சிந்தனைகள் புதிய கோணத்தில் உருவெடுக்கத் தொடங்கின. அதாவது அரசியல் செல்வாக்கை இலகுவில் தேடித் தம்மைத் தலைமைத்துவத் தளத்தில் நிலைநிறுத்திக் கொள்வதற்கு சிங்கள-பௌத்ததேசியவாதம்-பேரினவாதத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வதே சிறந்த மார்க்கம் என்பது அவரது சித்தாந்தமாகியது! அதாவது 1956 இன் பண்டாரநாயக்கா "யுகத்துக்கு" விரைந்து வட்டம் போட்டுச் சென்றார்.

அந்த வகையில் ஏதாவது ஒரு சாதனையை நிலைநாட்டிக் காட்டி "சி.பௌ.பே." யின் நற்சான்றிதழைப் பெற வேண்டும் என்று திட்டமிட்டார் விஜே. அதற்காக அவர் முதலில் தெரிந்தெடுத்தது தமிழர் தாயகத்தைத் துண்டாடுவது என்ற பரீட்சையையே ஆகும்.

வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு முன்னோடியாக, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி அங்கு வாழும் மக்கள் தமக்கென ஓர் அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற தெரிவுக் குழுவின் யோசனை விஜேதுங்காவின் திட்டத்திற்கு விருந்தாகியது.

அதனாலேயே அவர் கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் அழுங்குப் பிடியாக நின்று வெற்றியும் கண்டிருக்கிறார். கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது அங்கு ஜனநாயகம் தளிர்த்திருக்கிறது. ஆகையால் வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான வாக்கெடுப்பை நடத்தப் போகின்றோம் என்று தென் மாகாண சபையில் ஐ.தே. கட்சி வெல்லும் (பட்சத்தில்) அவர் அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### முன்னோடிப் பரீட்சை

ஏற்கனவே இப்பத்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது போல, வடக்குக்-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்புக்கான முன்னோடிப் பரீட்சையே இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்.

உண்மையான பரீட்சையை நடத்தி, வடக்கு-கிழக்கைப் பிரிப்பதிலும் விஜேதுங்கா வென்று விட்டால், அவர் சாகும் வரை ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாகவே இருப்பார் அதற்கான முழு ஆதரவையும் சி.பௌ.பே. வழங்கும். பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளை முதுசொமாக அவருக்கு நன்கொடை வழங்கும்.

இத்தகைய பின்னணியில் விஜேதுங்கா கிழக்குத் தேர்தலை நடத்தினார் என்பதால் அங்கு ஐக்கிய தேசியக் கட்சி போதியளவு வெற்றியைப் பெறவில்லை என்பது அவருக்கோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சிக்கோ எவ்விதபாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை. இந்த வகையில் தான் மார்ச் 1 தேர்தல் முடிவுகளை நோக்க வேண்டும்.

### தலைமைத்துவம் உருவானதா?

கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் மாநகரசபை, நகரசபைகள், பிரதேச சபைகள் உட்பட 40 உள்ளூராட்சி சபைகளில் தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

ஐ.தே.கட்சி — 18 சபைகள்
ஸ்ரீ ல சு. கட்சி — 03 சபைகள்.
முஸ்லிம் காங்கிரஸ் — 06 சபைகள்.
சுயேச்சை குழுக்கள் — 12 சபைகள்.
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி — 01 சபை.

இந்த முடிவுகளைப் பார்த்தால் உள்ளூராட்சித் தேர்தல் மூலம் கிழக்கில் வாழும் மக்களுக்குப் புதிதாக தலைமைத்துவம் எதனையும் உருவாக்க முடிந்ததாகத் தெரிகிறதா? ஏற்கனவே உள்ள இரண்டு சிங்களக் கட்சிகளும்; ஒரு முஸ்லிம் கட்சியும் தான் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அங்கு தேர்தல் நடைபெற்ற 39 சபைகளில் மூன்றில் எந்த ஒன்றேனும் அரைவாசிக்கு மேற்பட்ட பெரும்பான்மை சபைகளைப் பிடித்துள்ளனவா?

மறைந்து நின்று போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்களும் அரைவாசிக்குக் குறைவாகவே பெற்றுள்ளன. சுயேச்சைகள் ஒரே சாம்பார் தான் அவற்றில் பெரும்பான்மையானவை தமிழ்க் குழுக்கள் [illegible]. அந்தச் சுயேச்சைகள் பற்றிய கதை வித்தியாசமானது.

கிழக்குத் தேர்தலை தமிழர் கட்சிகள், குழுக்கள் முறைப்படி பகிஷ்கரித்திருக்க வேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழு வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்கு முனைந்த போது அதன் ஆரம்ப அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறிய தமிழ்க் குழுக்கள், வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்கு முன்னோடியாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஏதேதோ காரணங்கள் சாட்டுக்களைக் கூறி சுயேச்சை வடிவம் எடுத்துப் போட்டியில் குதித்தன! அரசியலின் ஆசைக்கு ஏது எல்லை?

# கொள்கை, கோட்பாடு, இலக்கு எதுவுமே இல்லாது தமிழர் அரசியல் வங்குரோத்து

### கூறிய காரணங்கள்

அவை கூறிய காரணங்களின் மாதிரிக்கு ஒன்று! சிங்களக் கட்சிகள் குறிப்பாக ஐ.தே. கட்சி உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி விடக் கூடாது என்பதற்காகவே நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம் — என்பது!

ஆனால் அவர்கள் ஒருமித்து ஒரே அணியில் நின்று போட்டியிட முனையவில்லை. தமிழனுக்கு ஒற்றுமை என்பது எட்டாப் பொருத்தம் என்பதால் தத்தமது குழுவின் (கட்சியின்) சொந்தப் பெயரில் அவற்றால் போட்டியிட முடியவில்லை என்று எடுத்துக் கொண்டாலும் —

ஒரு குழுவே வெவ்வேறாகக் கன்னை பிரிந்து வெவ்வேறு இடங்களில் வேறு வேறு சுயேச்சை வடிவங்களில் போட்டியிட்டதனை எதற்கு ஒப்பிடுவது?

கிழக்குத் தேர்தலில் தமிழர் அரசியல் என்ன பாடுபட்டது என்பதற்கு சில உதாரணங்களை மட்டும் படியுங்கள்:

★ வவுனியாவில் புளொட்டும் ரெலோவும் மோதிக் கொண்டன, ஆனால் மட்டக்களப்பில், ரெலோ கருணாகரன் உருவாக்கிய சுயேச்சைக் குழுவுக்கு புளொட் ஆதரவு வழங்கியது.

★ மட்டக்களப்பு மாநகர சபையில் ஈரோஸின் சுயேச்சைக் குழுவும் கருணாகரனின் சுயேச்சைக் குழுவும் வெளிச்ச வீடு சின்னத்துக்கு அடிபட்டு ஈரோஸ் குழுவுக்குத் தான் அந்தச் சின்னம் கிடைத்தது.

★ திருகோணமலையில் ரெலோவும் ஈரோஸும் சேர்ந்து சுயேச்சைக் குழு அமைத்தன. ஆனால் மட்டக்களப்பு மாநகரசபையில் இரண்டும் எதிரும் புதிருமாக மோதின.

இந்த லட்சணத்தில் தான் கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் நடந்திருக்கிறது. தாம் தேர்தலில் வென்று ஓர் ஆசனத்தைப் பிடித்தால் போதும் என்ற நிலையிலேயே அங்கு போட்டியிட்ட சுயேச்சைக் குழுக்கள் ஒருவரை மற்றவர் முந்திக்கொள்ள முயன்றன. தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் இல்லாக் குறை ஐக்கிய தேசியக் கட்சிக்கு மட்டும் இருக்கவில்லை, இவர்களுக்கும் இருந்தது.

மொத்தத்தில் தமிழர் அரசியல் தரம் தாழ்ந்து போனதையும் கிழக்குத் தேர்தல் படம் பிடித்துக் காட்டியது. கொள்கை, கோட்பாடு இலக்கு, இலட்சியம் என்று எதுவுமே இல்லாமல் தனிப்பட்ட லாபங்களுக்காகவும், அரசியலில் நாமும் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்வதற்காகவுமே தமிழ்க் குழுக்கள் போட்டியிட்டன. அந்தளவுக்கு கிழக்கில் தமிழர் அரசியல் வங்குரோத்து அடைந்து சைபர் நிலைக்கு வந்து விட்டது;

இன்னொரு வகையில் பார்க்கப் போனால், கிழக்கு அரசின் வசம் உள்ளது, அங்கு அமைதி நிலவுகிறது. மக்களுக்கு எவ்வித பிரச்சினையுமில்லை, தேர்தல் நடத்தக் கூடிய இயல்புநிலை உண்டு என்று வெளி உலகத்துக்குக் காட்டும் அரசின் நோக்கத்துக்கு தமிழ்க்குழுக்கள் துணை போயுள்ளன என்பதாகும்.

### பிரதமரின் புளகாங்கிதம்

இந்த வகையில் நடந்த தேர்தலை வைத்துக் கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கிழக்கில் ஜனநாயகக் கொடி ஏற்றப்பட்டு விட்டதாக புளகாங்கிதம் அடைந்தார்!

இலங்கை மக்கள் ஜனநாயகத்தில் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை கிழக்கு மாகாண மற்றும் வவுனியா வாக்காளர்கள் உலகத்துக்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள் — என்று கூறி தமது இலக்கை அடைந்து விட்டதைப் பறைசாற்றினார்.

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் ஜனநாயக முறையை பலப்படுத்த முன் வந்த சகல அரசியல் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் நன்றி கூறுகிறேன் — என்ற அவரது பாராட்டு, தமிழ்க் குழுக்கள் தேர்தலில் போட்டியிடுவதற்குக் கூறிய காரணத்தின் உண்மைத் தன்மையை அம்பலப்படுத்துகிறது!

கிழக்கு மாகாணத்தில் தேர்தலை சுதந்திரமாகவும் வெற்றிகரமாகவும் நடத்தியமை அரசாங்கத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி — என்று கிழக்கு மாகாண படைத்தளபதி லக்கி அல்கம டமாரம் அடித்தார். விடுதலைப் புலிகள் பயமுறுத்திய போதும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வாக்களித்ததாகவும் அவர் தனது "கெட்டித்தனத்துக்கு" தானே மாலை போட்டுக் கொண்டார்.

ஆனால் ஆங்கு நடந்தது பலாத்காரத் தேர்தல் என்பதனை சுதந்திரக் கட்சியும், முஸ்லிம் காங்கிரஸும் தெரிவித்த புகார்கள் நிரூபித்தன.

ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி வாக்களிக்கக் கட்டாயப்படுத்தியது, குண்டுத் தாக்குதல், தீயிடல், அப்பாவிப் பிரயோகம் ஆகியன நடத்தப்பட்ட சூழலில் தான் தேர்தல் நடைபெற்றது என்பதை பிரேஷ் பொலிஸ் அதிபர் ஒருவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அதிரடிப் படையினர் நாளாந்தம் கிழக்கின் கிராமங்களை சுற்றிவளைத்து, இளைஞர், யுவதிகளைப் பிடித்துச் சென்று ஆளுங்கட்சிக்கு வாக்களிக்குமாறு மந்திரம் ஓதுவதும் ஐ.தே.க வேட்பாளர்கள் பொறுப்பேற்றால் மட்டுமே அவர்கள் விடுவிக்கப்படுவதும்—

பலாத்காரத் தேர்தலா, சுதந்திரமான தேர்தலா என்பதை லக்கி அல்கமவிடம் தான் கேட்க வேண்டும்.

கிழக்குத் தேர்தலை அரச பயங்கரவாதத்தின் மத்தியில் எதிர் கொண்டதாக சுதந்திரக் கட்சி தேர்தல் குறித்து விடுத்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

கிழக்குத் தேர்தல் முழுப் புருடா என்று நவசமசமாஜக் கட்சி வர்ணித்தது.

### பிளவு பிளவு தான்

கிழக்குத் தேர்தல், அந்தப் பகுதி மக்கள் இன அடிப்படையில் பிரிந்து நிற்பதையே காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

சுதந்திரம் வந்த காலம் முதல் இன அடிப்படையில் வாக்குகள் விழுந்ததாலேயே நாட்டு முன்னேற்றம் தடைப்பட்டது என்றும் இந்த இன அடிப்படையிலான பிளவை விஜேதுங்கா தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப் போகிறார் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மொத்தத்தில் ஜனாதிபதி விஜேதுங்கா தனக்குச் சாதகமான ஒரு தேர்தலைக் கிழக்கில் நடத்தி முடித்து விட்டார். அவரது பொறிக்குள் தமிழ் அரசியல் குழுக்கள் மட்டுமன்றி கிழக்கு வாக்காளப் பெருமக்களும் சிக்கிப் போனார்களே என்பது கவலைக்குரிய விடயம்.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்பில் கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கக் குருவான வண. ஹரி மில்லர் பத்திரிகையாளர் ஒருவருக்குக் கூறிய வார்த்தைகள் நினைவூட்டத்தக்கன.

இந்தத் தேர்தல் மிகவும் வேடிக்கையானது, பகிடிக்குரியது என்று நான் கூறுகிறேன். ஆனால் ஒருவரும் சிரிக்கவில்லை—

உண்மையில் இது ஜனநாயகத்தை பரிகாசம் செய்யும் செயற்பாடு அரசியல் மேடையில் நடத்தப்படும் மற்றொரு நடன நிகழ்ச்சி— என்று அவர் கூறியது மெத்தவும் பொருத்தமானதே! ✱

உதயகாந்தன்

# இளம் கர்ப்பிணித் தாய்மாரை இலகுவில் தாக்கும் மலேரியா

## தடுப்பு மருந்தை முன்னரே வழங்குவது புத்திசாலித்தனம்

மலேரியா என்பது ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்குப் பரவும் தொற்று நோயாகும்.

ஆதிகாலம் தொட்டே மனித சமுதாயத்தை அழிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது இது. தகுந்த சிகிச்சை அளிக்கத் தவறின் மரணத்திலேயே கொண்டு போய் விடும் வல்லமையும் கொண்டது.

1934ஆம், 35ஆம் வருடங்களில் எமது நாட்டில் இந்நோயினால் 80ஆயிரம் பேர் உயிரிழந்தது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அண்மையில் பாவனைக்கு கொண்டு வரப்பட்ட — சக்தி மிகுந்த—தடுப்பு முறைகளினாலேயே இந்நோயினால் மரண வீதம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

மலேரியாவினால் பாதிக்கப்பட்ட மனிதன், காவிநுளம்பு ஆகிய இரண்டு கருவிகளாலேயே இந்நோய் பரவி வருகிறது. இவை இரண்டையும் இல்லாமல் செய்தால் மக்களை சுகதேகிகளாகக் காப்பாற்ற முடியும்.

### இரத்த ஒட்டுண்ணி

மலேரியா பிளாஸ்மோடியம் சாதியைச் சேர்ந்த இரத்த ஒட்டுண்ணிகளாலேயே இந்நோய் உண்டாகிறது.

மனிதர்களில் தோன்றும் மலேரியாவில் பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் (Plasmodium Vivax), பிளாஸ்மோடியம் பல்சிபாரம் (Plasmodium Falciparum), பிளாஸ்மோடியம் மலேரி (Plasmodium Malariae) ஆகியவை [illegible]கள் பங்கெடுக்கின்றன;

இவற்றில் முதலாவது உக்கிரம் குறைந்தது. ஆனால் அடிக்கடி இரட்டிக்கும் ஒரு வகை நோய்க்கு காரணமாகிறது. இரண்டாவது உக்கிரமானது. மூளையையும் பாதிக்கும். மூன்றாவது உக்கிரம் குறைந்தது தோன்றி மறையும் தன்மையுடையது

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் "மகப்பேற்றுக் கால மலேரியா" என்ற தலைப்பில் டாக்டர் சிவகுரு வழங்கிய கருத்துக்களின் தொகுப்பு.

மூன்று ஒட்டுண்ணிகளினதும் வாழ்க்கை வட்டம் ஒரே மாதிரியானதே.

மலேரியாவினால் பீடிக்கப்பட்ட மனிதனின் இரத்தத்தை நுளம்பு உறிஞ்சும் போது இரத்தத்துடன் ஆண் — பெண் புணரிக்குழியங்கள் நுளம்பின் வயிற்றில் சென்று 10 முதல் 14 நாட்களுள் விருத்தியடைந்து நுளம்பின் உமிழ்நீர்ச் சுரப்பியைச் சென்றடைந்து சுகதேகிகளின் இரத்தத்தை அந்த நுளம்பு உறிஞ்சும் போது அவரில் உடலிம்புகுந்து—கலந்து—அவரை நோயாளியாக்குகிறது.

### பெண் நுளம்பே நோய் காவி

அனோபிலிஸ் என்ற பெண் நுளம்பே காவியாக உள்ளது. உலகத்தில் நானூறு வகையான அனோபிலிஸ் உள்ளன.

இலங்கையில் அனோபிலிஸ் கியூலிபோஸிஸ் (Anophalese Culifocies) என்ற நுளம்பே காவியாக இருந்து இந்நோயைப் பரப்பி வருகிறது.

மலேரியா ஒட்டுண்ணிகளால் மனித உடலில் பல தாக்கங்கள், நோய்கள் உருவாகின்றன.

ஈரலில் விருத்தியடையும் ஒட்டுண்ணிகள் குருதியூடாக மனித உடலின் பல பகுதிகளை அடைகின்றன. அங்கு வாய்த்த இடங்களில் பெருக்கத்தைக் கூட்டி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இந்த ஒட்டுண்ணிகள் செங்குருதிக் கலன்களில் தங்கி, அவற்றைச் சிதைவடையச் செய்வதால் ஏற்படும் நச்சுத் தன்மை மூளைக்குச் சென்று சில பகுதிகளைத் தாக்கி காய்ச்சல் ஏற்படுகிறது.

ஒட்டுண்ணிகள் மூளைக்கு நேரடியாகச் சென்றும் தாக்கத்தை ஏற்படுத்தி மூளை மலேரியாவை உருவாக்குகின்றன.

### கர்ப்பிணித் தாயில்

இதேபோல இதயம், சிறுநீரகம், எலும்பு மச்சை, கர்ப்பிணித் தாய்மாரின் சதைக் கொடி போன்றவற்றைச் சென்றடைந்து பல தாக்கங்களை அவை உருவாக்குகின்றன. கர்ப்ப காலத்தில் அதிகமாக சுரக்கும் ஓமோன்கள் கர்ப்பிணித் தாயின் உடலில் எதிர்ப்புச் சக்தியை குறைப்பதனால் அத்தாய்மார்களில் மலேரியா தொற்றுவதற்கு அது வாய்ப்பாகி விடுகிறது.

### தடுப்பு மருந்து

எனவே தான் கர்ப்பிணிப் பெண்களுக்கு கருத்தரித்த காலம் முதல் குழந்தை பிறந்து இரு மாதங்கள் வரை மலேரியாத் தடுப்பு மருந்து — அதாவது குளோறோகுயின் — கொடுக்கப்படுகிறது.

காய்ச்சல் இருந்ததோ இல்லையோ மலேரியா பரவி வரும் பகுதிகளான வடமராட்சி கிழக்கு தென்மராட்சி மற்றும் கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து கர்ப்பிணித் தாய்மாருக்கும் இச்சிகிச்சை கையாளப்பட வேண்டும்.

முன்னேற்பாடாக இம்மருந்தைக் கொடுத்தாலும் அதனால் கர்ப்பிணித் தாய்மாருக்கு பக்க விளைவுகள் ஏதும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

எனவே பல உயிர்களின் அநாவசிய இழப்பை, சிசு மரணங்களை இச்சிகிச்சையால் நாம் கட்டுப்படுத்த முடியும்.

கர்ப்பிணித் தாய்மாரைத் தாக்கும் மலேரியா ஒட்டுண்ணிகள் குருதிவழியாக நஞ்சுக் கொடியைச் சென்றடைகின்றன. நஞ்சுக்கொடி ஒட்டுண்ணிகளின் விருத்திக்கு வாய்ப்பு உகந்த இடமாகும்.

அதிகமாக முதலாவது கர்ப்ப

(6ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: க. குணநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசர் நோய் வராமல்

# நாய்களுக்குப் போடப்படும் தடுப்பூசி மருந்து முடிவுற்றது

### உடன் தருவிப்பதற்கு முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 6
வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் வராமல் தடுப்பதற்கு முன் கூட்டியே போடப்படும் தடுப்பூசி மருந்து வடபிராந்திய சுகாதாரத் திணைக்களத்தில் முடிவடைந்து விட்டது.

இதனால் யாழ். கால்நடை வைத்தியசாலையில் வளர்ப்பு நாய்களுக்கு, விசர் நோய்த் தடுப்பூசி போடப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் 5 ஆயிரம் நாய்களுக்கு போடக் கூடிய அளவு இத்தடுப்பூசி மருந்தை கொழும்பிலிருந்து உடனடியாக தருவிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

## சுவீடனுக்கான முன்னாள் தூதுவரான

# ஹேமா சகோதரர் கொலை: கொள்ளை நோக்கம் அல்ல!

கொழும்பு, மார்ச் 6
திருமதி ஹேமா பிரேமதாஸாவின் சகோதரரும் சுவீடனுக்கான முன்னாள் இலங்கைத் தூதருமான பத்ரமால விக்கிரமதுங்கா கொலை செய்யப்பட்டதற்கு கொள்ளை நோக்கம் காரணம் அல்ல என்று பொலிஸார் நம்புகின்றனர்.

காலஞ்சென்றவர் அண்மையில் நீர்கொழும்பில் தமக்கு இருந்த வியாபாரக் கட்டடம் ஒன்றை ஒரு கோடி 15 லட்சம் ரூபாவுக்கு விற்றார் என்றும்—

கொலை செய்யப்பட்ட சமயம் காலஞ்சென்றவர் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பல தங்கச் சங்கிலிகளை அணிந்திருந்தார் என்றும் குற்றப்புலனாய்வுப் பணி இயக்குநரான பொலிஸ் அதிபர் லயனல் குணதிலக தெரிவித்தார்.

அவரைக் கொலை செய்தவராக சந்தேகிக்கப்படும் நபர் அவரின் நெருங்கிய சகா ஆவார் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

பத்ரபாலாவின் கட்டிலின் அருகில் கண்டெடுக்கப்பட்ட மூன்று அங்குல நீளக் கத்தியால் தான் அவர் குத்திக் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரின் நடமாட்டம் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருவதாகவும் எந்த நேரமும் அவர் கைது செய்யப்படலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-எ)

## ப. நோ. கூ. ச. கிளைகளில் மா

வடமராட்சி, மார்ச் 6
உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களுக்கு தேவையான மாவை வழங்கி வருகிறது.

ஒரு கிலோ 14 ரூபா 60 சத வீதம் சங்கத்தின் சகல கிளைகள், மக்கள் கடைகள் மூலமாக பாவனையாளர்களுக்கு மா விநியோகிக்கப் பட்டு வருகிறது. (இ-173)

### கௌதாரி---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
உருத்திரபுரம்)

★ லெப்டினன்ட் மயூரன் (சண்முகராஜா செந்தில்ராஜ் —கெற்பெலி, மிருசுவில்)

★ 2 ஆம் லெப்டினன்ட் வேலு (வெள்ளைச்சாமி கணேஸ் திருவையாறு, கிளிநொச்சி) (உ-5)

# தேர்தல் குளறுபடிகள் நிறைவேறாத இடங்களில் ஆளும்கட்சிக்குத் தோல்வி

கொழும்பு, மார்ச் 6
கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சியினர் தமது பலாத்காரத்தைப் பிரயோகிக்க முடியாத இடங்களில் தோல்வி கண்டுள்ளனர்.

— இவ்வாறு 'ராவய' சிங்கள வார இதழின் ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதம் தாங்கிய குழுக்கள் பலாத்காரமாக வாக்குச் சாவடிக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, பலாத்காரமாக வாக்குகளைக் கொள்ளையிடும் வழக்கத்திலிருந்து இலங்கை மீள முடியாது என்பது கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களில் இருந்து புலனாகியுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் பல சம்பவங்கள் அங்கு நிகழ்ந்துள்ளன.

கடற்தொழில், நீர்வள அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையிலான குண்டர் குழு ஒன்று திருகோணமலையில் வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து பலாத்காரமாக வாக்குகளைப் போட முயற்சித்தது. ஆனால் திருமலை கட்டளையிடும் அதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ் அதனை முறியடித்துள்ளார்.

ஆளும்கட்சியினரின் பலாத்கார முயற்சி அங்கு கைகூடாததால் அவர்கள் அங்கு தோல்வியடைந்துள்ளனர். திருமலையில் ஆளும் கட்சிக்கு 23 வீத வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன.

தேர்தலில் பலாத்காரமாக வாக்களிக்க ஆளும் கட்சியினர் எடுத்த முயற்சி எங்கெங்கு தோல்வியடைந்ததோ அங்கு எல்லாத் தேர்தல்களில் அவர்கள் தோற்றுப் போயுள்ளனர்.

மட்டக்களப்பு ஐ.தே.க. அமைப்பாளர் பொலிஸாருடன் சேர்ந்து களுவாஞ்சிக்குடியில் வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து வாக்குச் சீட்டுகளைப் பலாத்காரமாக கைப்பற்ற முனைந்தபோது, அங்கிருந்த மற்றைய பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்தனர். இதனால் ஐ.தே.க அமைப்பாளருடன் வந்த பொலிஸ் குழுவுக்கும் காயம் ஏற்பட்டது.

### பொலிஸாரே இடமளித்தனர்

ஆனால் மற்றைய சில பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளே பலாத்கார முயற்சிகளுக்கு இடமளிக்கும் வகையில் செயல்பட்டுள்ளனர்.

எப்படி நடந்து கொண்ட போதிலும் —

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் ஆளும் கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையில் பெரு வீழ்ச்சி காணப்படுகின்றது.

1988 இல் திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 51 வீத வாக்குகளைப் பெற்ற ஆளும் கட்சி இம் முறை 39 வீதத்தையேபெற்றிருக்கிறது. திருமலையிலும் 9 வீத சரிவு ஏற்பட்டுள்ளது

### முஸ்லிம் காங்கிரஸ் முரண்டு பிடிக்கிறது.

முன்னர் ஐ.தே.க வுடன் நெருங்கி உறவாடி வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இப்போது ஐ.தே.க வுடன் முரண்டு பிடிக்கிறது.

தேர்தல்களின் போது அரசு மேற்கொண்ட பலாத்கார, வன்முறை நடவடிக்கைகள் பற்றிய விவரம் அடங்கிய பூரண அறிக்கை ஒன்றை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றி விட்டு தமது எம்.பி.பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி பிரேமதாஸா இப்போது இல்லை என்பதால் முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட வன்முறை தொடராது என மக்கள் நம்பினர்.

ஆனால் கிழக்குத் தேர்தல் நிலைமை இன்னும் மாறவில்லை என்பதையே —புதிய ஜனாதிபதியும் பழைய பாதையிலேயே பயணம் செய்கிறார் என்பதையே — மக்களுக்குக் காட்டியிருக்கிறது.

புதிய ஜனாதிபதி இலங்கையின் உள்ள இனங்கள், மதங்கள் முதலியவற்றைப் பிரிக்கும் கொள்கையை மட்டுமல்லாமல் சிங்கள இனத்தையே பிரிக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றார்.

தீவிர மலைநாட்டுக் கொள்கையை கடைப்பிடிப்பதன் மூலம் புதிய ஜனாதிபதி சிங்கள மக்களையே பிரிக்கிறார்.

அவரின் இனவாதக் கொள்கையினால் இதுவரை காலமும் அவரது கட்சியுடன் நெருங்கிச் செயற்பட்டு வந்த சிறுபான்மையினரின் கட்சிகள் குழுக்கள் கூட அவரது கட்சியைக் கண்டிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

— இப்படி விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (உ-6)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
கடந்த வியாழனன்று பூநகரிப் பகுதியில் இடம்பெற்ற வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வீரவேங்கை இந்திரன் — அல்லது ஸ்ரீதர் (பசுபதி நந்தமோகன் — புலோலி தெற்கு) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

அவரது வித்துடல் நேற்று புலோலி காந்தியூர் சனசமூக நிலைய முன்றிலும், நெல்லியடி மத்திய பஸ் நிலையப் பகுதியிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் வித்துடல் சகல இராணுவ மரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (உ-5)

### ஜி சீ ஈ உயர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வது பாடமான கூட்டுப்பாடத்தையும் பயில வேண்டும்.

★ பௌதிக விஞ்ஞானப் பிரிவில் பயில்வோர் கணித, பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றுடன் நான்காவது பாடமான கூட்டுப் பாடத்தையும் பயில வேண்டும்.

★ கலை, வர்த்தகப் பிரிவுகளில் பயில்வோர் நான்காவது கூட்டுப் பாடத்துடன் ஏனைய பொருத்தமான மூன்று பாடங்களைப் பயில்வர்.

நான்காவது பாடமான கூட்டுப் பாடத்துக்குரிய பாட நூல்கள் கொழும்பில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அவை விரைவில் அச்சிடப்பட்டுவிடும் என்றும் கல்விப் பகுதி அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-3)

### இளம் கர்ப்பிணி---

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
காலப் பெண்களும் — இளந் தாய்மாரும் — இந்நோய்க்கு எளிதில் இலக்காவர்.

#### போஷாக்கு பாதிப்பு

நஞ்சுக் கொடியில் ஒட்டுண்ணி விருத்தியடைந்து அப்பகுதியைச் சிதைவடையச் செய்வதால் தாயில் இருந்து சேய்க்கு போகும் போஷாக்கில் பாதிப்பு ஏற்படுகிறது.

மலேரியாக் காய்ச்சல் காணும் கர்ப்பிணிகளுக்கு கருச்சிதைவு அதிகமாக உண்டாகலாம். மேலும் சிசுக்கள் இறந்து பிறத்தல், பிறந்த குழந்தைகள் இறத்தல் அல்லது நிறை குறைந்து பிறத்தல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

கூடுதலாக நஞ்சுக்கொடி தாக்கப்படுவதாலேயே இந் நிகழ்வுகள் ஏற்படுகின்றன.

கருவில் இருக்கும் சிசுக்கள் இலகுவில் மலேரியா ஒட்டுண்ணியால் பாதிப்படைவதில்லை. குழந்தையின் இரத்தத்தில் இருக்கும் ஹீமோகுளோபின் தாயில் இருந்து வேறுபாடுடையதால் மலேரியா ஒட்டுண்ணிகள் அவற்றை நாடுவதில்லை. இதனால் இவை குழந்தைகளில் தொற்றிக் கொள்ளமாட்டா.

எனினும் தாயின் பாதிப்பால் போஷாக்கின்மை ஏற்பட்டு சிசு மரணங்கள் நிகழ்கின்றன அல்லது குழந்தைகளுக்கு இரத்தச்சோகை நோய் ஏற்படுகிறது.

மேலும் மலேரியாவால் பீடிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு பசியின்மை இருப்பதால் வேண்டிய உணவை உட்கொள்ள முடியாது தாயும், சேயும் போஷாக்கை இழக்கின்றன.

இக்காரணங்களாலேயே குழந்தையின் இறப்பு, கருச்சிதைவு, நிறைகுறைந்த குழந்தைகள், குறித்த காலத்திற்கு முன் பிறப்பது போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன.

எனவேதான் மலேரியா நோய்க்கு ஆளானாலும் இல்லாவிட்டாலும் இளம் தாய்மாருக்கு கர்ப்பகாலத்தில் குளோரோகுயின் மருந்து முறைப்படி கொடுக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

எனவே இளம் கர்ப்பிணிகள் நுளம்புக் கடிக்கு இலக்காகாமல் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

நுளம்புகள் சுற்றுச் சூழலில் பெருகாமல் பார்த்துக் கொள்வதே நுளம்புக் கடியைத் தவிர்ப்பதற்கு முக்கிய உபாயமாகும்.

### ஸ்ரீலங்கா விமான---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
கொல்லப்பட்டுள்ளனர். இவற்றில் கிளாலி பகுதியில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இராணுவத்துக்கு ஏற்பட்ட பின்னடைவுகளைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. இத்தகைய வியானத்தாக்குதல்களினாலும், ஷெல் வீச்சுக்களினாலும் 150 க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு அகதிகள் அல்லது இடம்பெயர்ந்தவர்கள் நாட்டுக்குள் பிரவேசிக்கவோ, அல்லது வசிப்பதற்கோ ஸ்ரீலங்கா அரசு அனுமதி வழங்கவில்லை. ஆனால் 1993 ஆம் ஆண்டு உள்ளூரிலேயே இடம்பெயர்ந்தவர்களின் தொகை 6 லட்சத்து 20 ஆயிரம் ஆக இருந்தது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் 70 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் அகதிகள் தென்னிந்தியாவில் உள்ள முகாம்களில் இருந்தனர்.

அவர்களில் 7 ஆயிரம் பேர் கடந்த ஆண்டு இலங்கை திரும்பினர்.

கடந்த 10 வருட காலப் பகுதியில் 2 லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்க நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

### ஆளும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குண்டர் குழுவின் தலைவராக இருக்கிறார் என்றும் —

இந்த 'லொக்கா' இலக்குத் தவறாமல் சுடுவதில் நிபுணர் என்றும் கூறப்படுகிறது.

இக் குண்டர் குழுவின் ஒரு பகுதியினர் தென் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஒருவரின் உறவினர் வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளார் என்றும்—

இன்னொரு பகுதியினர் கரந்தெனியாவில் கிறிமக்கேவளவு என்றழைக்கப்படும் வீட்டில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

தென்பகுதியில் பொதுமக்கள் முன்னணிக்கு அதிகரித்து வரும் ஆதரவைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஆளும் கட்சியினர் பயங்கரவாதத்தின் மூலம் மக்களை அச்சுறுத்தி ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (உ-எ-6)

### படையினரின்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிய தேசியக் கட்சி ஒன்பது வாக்குகள் பெரும்பான்மையினால் அதன் நிர்வாகத்தைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

வாக்களிப்பு தினத்தன்று வாக்களிப்பு நிலையம் ஒன்றினுள் திடீரென்று பிரவேசித்த பாதுகாப்பு அதிகாரிகள் சிலர் சுமார் 150 வாக்குச் சீட்டுக்களை பறித்தெடுத்து பின்னர் அவற்றில் புள்ளடியிட்டு வாக்குப் பெட்டியினுள் போட்டனர் என்று ரெலோ அமைப்பு தனது தேர்தல் ஆட்சேபனை மனுவில் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் வாக்களிப்பு நிலையத்தினுள் பலாத்காரமாகப் பிரவேசித்ததை அவ் வாக்களிப்பு நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட அரச அதிகாரி தமது குறிப்பேட்டில் பதிந்துள்ளார் என்றும் ஆட்சேபனை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ-6]

## மைலாப்பூரில் தி.மு.க.போட்டி

சென்னை, மார்ச். 6
தமிழ்நாடு, மயிலாப்பூர் சட்டசபைத் தொகுதிக்கு எதிர்வரும் மே மாதம் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் தி.மு.க. போட்டியிடும்.

தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி இதனை வெளியிட்டார்.

ஏற்கனவே உள்ள தேர்தல் உடன்பாட்டில் மாறுதல் இல்லை என்றும்—

பெரியார் மாவட்டம் திருப்பெருந்துறைச் சட்ட சபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அங்கு போட்டியிட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு திமுக விட்டுக்கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜனதா தளம் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகியவற்றுடனான தி.மு.க.வின் உறவு இன்னும் நீடிப்பதாகக் கூறிய அவர், தேசிய முன்னணி இன்னும் நீடிக்கின்றது என்றும் கூறினார்

## தென்மாகாணத் தேர்தல்:

# எதிரணிக்கு ஆதரவான இளைஞர்களுக்கு மிரட்டல்!

கொழும்பு, மார்ச். 6
தென் மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவளித்து வரும்—தடுப்புக்காவலில் இருந்து விடுதலையான— சிங்கள இளைஞர்களை பொலிஸார் பொலிஸ் நிலையங்களுக்குக் கூட்டிச் சென்று அவர்களின் கைவிரல் அடையாளங்களையும் புகைப்படங்களையும் எடுத்து வருகின்றனர் என்றும்—

இதனால் அந்த இளைஞர்கள் உளரீதியான பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளராக மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடும் டலஸ் அழகப்பெருமா என்பவரே இக்குற்றச் சாட்டைச் சுமத்தியிருக்கிறார்.

தமது பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட இத்தகைய இளைஞர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற பொலிஸார், அந்த இளைஞர் வீட்டில் இல்லாததைத் தொடர்ந்து அவரின் தாயாரை பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் சென்றதாகவும் அவர் கூறினார். (உ-எ-6)

# தமிழக ஆளுநர் - ஜெயலலிதா 'பனிப்போர்' முடிவுக்கு?

சென்னை, மார்ச். 6
தமிழக சட்ட சபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரை எதிர்வரும் 16ஆம் திகதி மாநில ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டி அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரைநிகழ்த்தவிருக்கிறார்.

முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கும் டாக்டர் சென்னாரெட்டிக்கும் இடையே இடம் பெற்று வந்த 'பனிப்போர்' இதன் மூலம் முடிவுக்கு வரலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆளுநர் கலந்து கொள்ளும் கூட்டங்கள், நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் கலந்து கொள்ள மறுத்து வந்தமையும்—

அ.தி.மு.க. அரசின் நிர்வாகத்தில் ஆளுநர் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வந்ததும் தெரிந்தவையே (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு சபாபதி

அளவெட்டி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சின்னப்பு சபாபதி நேற்று (5-3-94) காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும், சாந்தினி (Canada), ஜானகி (Batticaloa), பகவதி (Teacher, Arunodaya College), தெய்வேந்திரன் (Canada), ஜெய்சங்கர் (Canada) அசோகன், தயாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானரட்ணம் (Canada), ஆனந்தகுமார் (Fisheries Dept. Batticaloa), சிறிஸ்கந்தன் (SriLanka, Cement Corporaton, Kankesanthurai), குமுதினி (Canada) ஆகியோரின் மாமனாரும், கொற்றவை (Canada), பூரணிதினி (Canada) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-3-94) காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. அசோகன்
(மகன்)

தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.
(29766)

### திருமதி தனலட்சுமி பரமநாதன் (ஆச்சி)

தாவளை சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி பரமநாதன் சிங்கப்பூரில் 2-3-94 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

இவர் அருணாசலம் பரமநாதனின் (ஓய்வு பெற்ற சுங்க அத்தியட்சகர், சிங்கப்பூர்) அன்பு மனைவியும், விக்னேஸ்வரனின் (சிங்கப்பூர்) பாசமிகு தாயாரும், மாவடி சித்தன்கேணியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நில அளவையாளர், சிங்கப்பூர், காலஞ்சென்ற திரு திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மகளும், திருமதி செல்லம்மா சின்னத்தம்பி, திருமதி நேசம்மா அருணாசலம் ஆகியோரின் மருமகளும், சிங்கப்பூரை வசிப்பிடமாகக் கொண்ட அன்னலட்சுமி, மகாதேவன், இராஜதேவன், ஜெயதேவன் ஆகியோரின் சகோதரியும், திருமதி கனகாம்பிகை மயில்வாகனம் (சித்தன்கேணி), சிவபாதசுந்தரம் (லண்டன்), திருமதி செல்லப்பா செல்வராணி (கொழும்பு), திருமதி சபாரட்ணம் கோமதி (கொழும்பு), இராமநாதன் (கொழும்பு), தேவராஜன் (லண்டன்), வேலுப்பிள்ளை (லண்டன்), தெட்சணாமூர்த்தி (கனடா), இரவீந்திரன் (இத்தாலி), துரைரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. மயில்வாகனம்

'அன்னை இல்லம்'
வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.
[29769]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தசாமி திலகவதியார்

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த திருமதி கந்தசாமி திலகவதியார் 5 - 3 - 94 ஆம் திகதி காலமானார். அன்னார் காலம்சென்ற கந்தசாமி (பெருந்தோட்ட மேற்பார்வையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலம்சென்ற மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி சரஸ்வதி செல்லத்துரையின் அன்புச் சகோதரியும், கணேசகுமாரன் (சவுதி), குசலகுமாரன் (கணக்காளர், பிரதேச செயலகம், தம்பலகாமம்), சுகிர்தகுமாரன் (நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனியா), நந்தகுமாரன் (பாலா ஸ்கூட்டர் வேக்ஸ் - ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்), இளங்குமாரன் (சவுதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவலட்சுமி, ராதா (வருமானவரித் திணைக்களம் - கொழும்பு), மாலினி, நளாயினி (ஆசிரியை, ஐக்கிய சங்க சைவவித்தியாலயம், சுழிபுரம்), பரதகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும், மிருணாளினி, துஷிகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க நந்தகுமாரன்
(மகன்)

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
(29772)

### திருமதி கதிரவேலு சிவநிதி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி கதிரவேலு சிவநிதி அவர்கள் 05-03-94 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலுவின் அன்பு மனைவியும், வாசவன் [ஆங்கில ஆசிரியர், வவுனியா], கேசவன் ஆகியோரின் அருமைத் தாயாரும், ராஜியின் அன்பு மாமியாரும், சிவானந்தன் [நோர்வே], நடராசா [சிங்கர் கொம்பனி - வவுனியா], காலஞ்சென்ற செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தூயோனின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கதிரவேலு
[கணவன்]

வேதக் கோயில் அருகாமை,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் - கிழக்கு.
[29771]

நீங்கள் தேசத்தை நேசிப்பது உண்மையானால்
பசிய [illegible]!

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் காவலர் வீதி, 898/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06-03-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org